போன் நெ. 15. விலை 2 அணா

# திராவிடநாடு

மலர் 13 | 26—12—54 | இதழ் 26

காமிரா
ஏற்றுக்கொள்ளாத
காட்சி

## "குறும்புக்காரன்!"

இடம்: ஊர்க்கோடி சாவடி
இருப்போர்: ஒருவாலிபன்
—சீர்திருத்தக்காரன்
கிராமப் பெரியவர்கள்

[கிராமப் பெரியவர்கள், அந்த வாலிபன், பழயகால ஐதீகங்களையும் ஏடுகளையும் கண்டிப்பவன் என்ற காரணத்துக்காக, அவனிடம் கோபம் கொண்டிருக்கிறார்கள். அந்த வாலிபன், கேட்கும் கேள்விகளுக்கு அவர்களால் பதிலளிக்க முடிவதில்லை. காட்டுகிற காரணங்களையும் மறுத்திட முடிவதில்லை! கெட்டிக்காரத் தனமாகத்தான் பேசுறான்!

பட்டணத்துப் படிப்பு!

வாயாடி, வல்லடிக்காரன்!

அணு அணுவாப் பிளந்து காட்டுவான், போக்கிரிப்பய!

என்றெல்லாம், செல்லமாக அவனிடம் கோபித்துக்கொள்வார்கள்.

அவன், கிராமப் பெரியவர் ஒருவரைக் கண்டு..................]

வாலி:- அண்ணேன்! உங்களை ஒரு விஷயம் கேட்க வேணும்னு......

பெரி:- எப்பத்தாண்டா, விஷயம் கேட்காம இருக்கறே.........சரி இப்ப என்ன விஷயம் கிடைச்சுகிட்டது......

வா:- கோபமா இருந்தா. வேண்டாம் ......சாந்தமா இருந்தாத்தான் பேசுவேன்.........

பெரி:- ஏண்டா, அப்ப நான் என்ன முன் கோவக்காரனா......

வா:- அப்படிச் சொல்லலிங்க......... ஏகாத்தா மேலே இருக்கிற கோவத்தை ஏரு மேலே காட்டினான்னு பழமொழி சொல்லுவாங்களே, அதுபோல, வேறே எதாச்சும் காரணமா கோபம் இருந்தா, அதை என்மேலே காட்டிவிடப் போறிங்களே என்கிற பயம் தான்.........

பெரி:- கோவம், யார் பேரிலேயும் இல்லை, சொல்லு, சொல்லு......

வா:- பெத்த தாயை, தாறுமாறுப் பேசுகிற மகனைப் பார்த்தா நல்லவங்க, பெரியவங்க கண்டிக்கத் தானே செய்வாங்க......அவங்க மனசு பதறுமேல்லோ — தாயை ஏசுறானே இந்தத் தறுதலை, இவன் கொழுப்பை அடக்கியாக வேணும், இவன் முகத்திலே விழிப்பது கூடப் பாவம்—அப்படி இப்படின்னு தானே பேசுவாங்க, நல்லவங்க

பெரி: ஆமாம்......எல்லோருமேதான் ஏசுவாங்க......

வா:- உன்னைப் பெற்றெடுத்து வளர்த்த தாயை, உன்மேலே ஈ எறும்பு கூட உட்காராதபடி பதுகாத்து உன்னைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த மாதாவை, கேவலமாகப் பேசுகிறாயே, கேடு கெட்ட மூடனே,...........என்று காரணங்களைக் கொட்டிக் காட்டித் திட்டுவார்களேல்லோ.

பெரி:- ஆமாம்—சந்தேகம் என்ன?

வா:- அதே மகன், தாயாரைத் திட்டுவதுடன் விட்டு விடாமல், அடித்தா......?

பெரி:- செ! அவனும் ஒரு மனஷனா!

வா:- உலகம், அவனை மதிக்காது— அதானே......

பெரி:- ஆமாம்! காரி உமிழ்ந்து......

வா:- அந்த மகன், திட்டுவது, அடிப்பது......என்ற அளவோடும் நிற்காமே, தன் தாயார் தலையை வெட்டியே போட்டா...

பெரி:- (பதறி) படுபாவிப்பய! என்ன, என்ன, தாயார் தலையையா வெட்டினான்...யார் அந்தக் கிராதகன் ...எங்கே இருக்கிறான்......?

வா:- அட, இரு, பெரியவரே! அந்த மாதிரியா ஒருவன் செய்தானானா, உலகம் என்ன எண்ணும், என்ன சொல்லும் அவனைப் பற்றின்னு, கேள்வி கேட்டா, கொண்டா அவனைன்னு, என் எதிரே கொக்கரிக்கிறிங்களே! ... மடையன் ... தாயார் தலையையே ஒரு மகன் வெட்டினா, அந்த மகனைப் பற்றி, உலகம் என்னசொல்லும்? சொல்லுங்க.

பெரி:- உலகம், அவனை, மகாபாவி, நீசன், கொலைகாரன், என்று.....

வா:- என்னென்ன வார்தை கூறி ஏச முடியுமோ அவ்வளவும் எடுத்து வீசும்.

பெரி:- ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனை அல்லவா அழைத்து வந்து அவனைத் திட்ட வைக்க வேணும்...

வா:- அவ்வளவு ஆத்திரம் வருதேல்லோ?...

பெரி:- வராமல் இருக்குமா? பெற்றெடுத்த தாயாரோட தலையை வெட்டுகிற மகாபாதகனை, உலகம் விட்டு வைக்குமா......?

வா:- பாம்பைக் கண்டா கொல்ல வேணும், தேளைக் கண்டா சாகடிக்கோணும், அது போலவே, தாயைக் கொல்கிற மகனை......?

பெரி:- மகனா அவன்......மகாபாவி!

வா:- அது சரி—மகனான அந்த மகா பாபியைக் கண்டா...

பெரி:- வெட்டி வெட்டி, கண்ட துண்டமாக்கி, காக்கைக்கும், நாய்க்கும் நரிக்கும், விருந்திட வேணும்...

வா:- தீர்ப்புக் கூறி விட்டிங்க பெரியவரே! பெரியவரில்லையா, நியாயம் தவறிப் பேசுவிங்களா!

பெரி:- நான் மட்டுமா! உலகமே இது போலத்தான் தீர்ப்புக் கூறும்.

வா:- சரி. இப்ப, பாருங்க உங்க தீர்ப்பும், உலகத்தின் தீர்ப்பும் ஒரு விநாடியிலே, மாறுது......

பெரி:- என்னப்பா, வேடிக்கையா பேசறே—மகன், தன் தாயார் தலையை வெட்டினா,......

வா:- அதுதான் விஸ்தாரமாச்சொல்லி விட்டிங்களே! காக்கை கழுகு, நாய் நரி எல்லாமும் காத்துக்கிட்டு இருக்கு—உங்க கையிலேயும் கத்தி அரிவா, எல்லாம் கொடுத்திருக்கு, தாயை வெட்டினவனையும் எதிரே கொண்டு வந்து நிறுத்தி இருக்குன்னு வைத்துக் சொள்ளுங்க. ஆகட்டும்—தண்டனையை நிறைவேற்றுன்னு சொன்னா......

பெரி:- கொஞ்சம் கூடத் தயக்கமில்லாமே, தண்டனையை நிறைவேற்றுவேன்......

வா:- அதுதான் இல்லைன்னு சொல்றேன்.

பெரி:- என்ன, இல்லை, தண்டனையை நிறைவேற்ற மாட்டேனா?

வா:- ஆமாம்—முடியாது......

பெரி:- சுத்தப் பொய்—கட்டாயம் தண்டித்தே தீருவேன்......

வா:- முடியவே, முடியாது...

பெரி:- டே! நீ, என்னை, என்னவென்று எண்ணிக்கொண்டு, ஏளனம் செய்கிறே...

[கூச்சல் கேட்டு இரண்டொருவர் வருகிறார்கள்]

பெரி:- அண்ணேன்! பெத்ததாயை ஒருவன் கொன்றுவிட்டா, அந்தப் பேய் மகனை, கொன்னு போடாம, இருப்பமா — நாமெல்லாம்...

அவர்:- ஆமாம்—குத்திக்கொன்று போட்டுவிட்டுத்தான் மறுவேலை பார்ப்போம்...

பெரி:- இவன் — நாமெல்லாம், அது போலச் செய்யமாட்டோம்னு சொல்லுகிறான்.

வா:- செய்யமுடியாதுன்னுதான் இப்பவும் சொல்றேன். உங்களாலேயும்—அதோ, அவராலேயும் முடியாது...

பெரி:- உன்னாலேமட்டுந்தான் முடியுமா?

வா:- சொன்னேனா? என்னாலேயுந்தான் முடியாது! முடியாததுமட்டுமில்லே, தீர்ப்பையே மாற்றிக்கொண்டு, தாயின் தலையை வெட்டினவன் காலிலே விழுந்து நமஸ்காரம் செய்து, சாமி! ஆசீர்வாதம் செய்யவேணும்—எங்க பிள்ளை குட்டிகளெல்லாம் சுகமாக இருக்கவேணும்னு, வரம் கேட்போம்...

பெரி:- அந்த மகா பாபியை...?

(16-ம் பக்கம் பார்க்க)

# ★ பக்த மீரா ★

பக்த மீரா கதை தெரியும் அனைவருக்கும்—படக்காட்சியும் எடுத்தார்கள்.

உள்ளம் உருகும் 'பஜனை' பாடி, கிருஷ்ணனைத் தொழுத பக்தை!

மீராவின் பிரபு — கண்ணன் — என்று கூறிக் கொண்டாடுவர் பக்தர்கள்.

மேவார் நாட்டு மன்னன், ராணா கும்பா என்பவரின் பத்னி, மீரா. கண்ணனிடம் மீரா கொண்டிருந்த 'பக்தி' காரணமாக, தன்னிடம் துளியும் பிடித்தம் காட்டாதிருந்ததற்காக, மீராவைக் கணவன் கொடுமை செய்கிறான். மீரா, கண்ணனைக் கண்டாக வேண்டுமென்று, வீட்டைவிட்டு வெளி ஏறி, பிருந்தாவனம் சென்று, பகவந் நாமாவளி பாடிப் புரிப்பதாகக் கதை இருக்கிறது.

**இது உண்மையல்ல என்கிறார் ஒரு பேரறிஞர்!**

பிடி அவனை! சுடு!—என்று பக்தர்கள் பதறிக் கூறுவர் — யாரோ சூனமானாவின் பேச்சு இது என்று.

இது வரை நாம் நம்பிக் கொண்டிருக்கும் கதை தவறு, மீராவின் வரலாறு வேறு வகையானது — பக்த மீரா அல்ல அந்த அம்மையார்—அரசியல் யூகமுள்ள மீரா — என்று கூறுகிறார் ஒரு ஆராய்ச்சியாளர்.

டில்லியிலுள்ள இந்த ஆராய்ச்சியாளர் பெயர் டாக்டர் கோபட்ஸ்.

அவர் கூறுகிறார்,

"நான் ஆராய்ச்சி நடத்தியதில், மீரா, மேவார் ராணாவின் மனைவி அல்ல என்றும், கண்ணனிடம் மீரா காட்டிய பக்தியைக் கண்டு கணவன் கொடுமைப்படுத்தினான் என்பது உண்மையல்ல என்பதும் தெரியவருகிறது.

மீரா, மெர்த்தா எனும் நாட்டு அரசகுமாரி.

ராணசங்காவின் மூத்த மகன் போஜராஜ் என்பவரைத் திருமணம் செய்துகொண்டவர்.

கணவன் இறந்துபட்டு, மீரா, பால்ய விதவையானார்.

ராணசங்கா, 1528ல் இறந்தார்,

பிறகு, அரசியல் காரணங்களுக்காக, ராணா ரத்தன் சிங்கும், பிக்கிரமஜித்தும் மீராவைக் கொடுமை செய்தார்கள்.

1536ல், இந்தக் கொடுமைகளிலிருந்து விடுபட, மீரா, துவாரகை சென்றார். அங்கு இருந்த கிருஷ்ணன் கோயிலைப் பழுது பார்த்துப் புதுப்பித்தார்.

1546ல் மீண்டும் மீரா தலைமறைவாக இருக்கநேரிட்டது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு மீரா, மீண்டும் வெளியே உலவி, பீர்பால், மான்சிங் போன்ற சீர்திருத்தக்காரருடன் சேர்ந்து தொண்டாற்றினார்.

அக்பர் ஆம்பர் அரசகுமாரியைக் கலியாணம் செய்து கொண்டதற்கும், மீரா அனேகமாகக் காரணமாக இருந்திருக்கலாம் என்று தெரிகிறது.

1567ல், மீரா காலமானார்.

இதுதான், நான் ஆராய்ச்சி செய்ததில் எனக்குத் தெரிவது!"

இவ்வாறு கூறுகிறார் டாக்டர் கோயிட்ஸ்.

பக்த மீராவை — சீர்திருத்தத் தொண்டாற்றியவர், என்கிறார்.

அவருடைய 'துறவு' பக்தி காரணமாக அல்ல, அரசியல்நிலைமை காரணமாக ஏற்பட்டது என்கிறார்.

கண்ணனை 'பிரபு' எனப் பணிந்து உள்ளம் உருகப் பாடி, அற்புதம் நிகழ்த்தியதாக பக்தகோடிகள் கொண்டாடும் மீரா எங்கே—இந்த ஆராய்ச்சியாளர் கூறும் மீரா எங்கே!

மீராவின் உண்மை வரலாறுதான் என்ன? பக்தர்களுக்குப் புதிய தலைவலி தருகிறார், ஒரு ஆராய்ச்சியாளர்.

பதறிப் பயன் இல்லை!

பலப்பல பழங்காலக் கதைகளின் கதி இதுபோலத்தான் ஆகும்!!

இந்த ஆராய்ச்சியாளர், எங்கோ குறுமாறு கூட்டத்திலே இப்படி ஒரு குதர்க்கம் பேசினார்போலும் என்று எண்ணிடத் தோன்றும் பக்தர்களுக்கு.

இந்த ஆராய்ச்சியாளர், நவம்பர் 30ல், டில்லியில், எழுத்தாளர் கூட்டத்தில், இந்தவிதமாகப் பேசினார்.

அந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தவர், இந்தியக் குடியரசின் துணைத் தலைவர், டாக்டர் ராதாகிருஷ்ணன்.

டாக்டர் ராதாகிருஷ்ணன், இந்த ஆராய்ச்சியாளரை மறுத்துப் பேசவில்லை! என்ன சொல்லுகிறீர்கள்?

★

# அரசியற் கருத்துக்கள்

**[ அன்று முதல் இன்று வரை ]**

[பேராசிரியர் இருதயராஜ்]

ஆளுபவர்கள், நாட்டைத் தங்கள் சுயநலக்காடாக மாற்றிவிடக்கூடாது என்பதற்காக முதல் இரண்டு வகுப்பாகிய அறிஞர்கள், அதாவது ஆளுபவர்கள், போர்வீரர்கள், இவர்கள் இருவருக்கும் தனிஉடைமையாக, சொத்து, குடும்பம், வீடு, மனைவி மக்கள் ஆகியவைகள் இருக்கக்கூடாது என்று பிளேட்டோ கருதினார். தனிஉடைமையை அனுமதித்து அதிகாரத்தைக் கொடுத்தால் சுயநலத்தால் லஞ்ச ஊழலும், சொத்துச் சேர்க்கும் உரிமை இருந்தால் மக்களைக் கொடுமைப்படுத்தவும் அவர்களுக்கு வஞ்சகம் செய்யவும் ஏதுவாக இருக்கும் என்று கருதியதால், பிளேட்டோ ஆளுபவர்களுக்குச் சொத்துரிமை, தனி உடைமையை மறுத்தார். போர் வீரர்களும் தன்னலமற்ற சேவைசெய்ய வேண்டியவர்கள். குடும்ப பாரம் மற்றும் வாழ்க்கைக் கவலைகள் அவர்களை அழுத்தாமலிருக்க வேண்டும். ஆதலால், அவர்களுக்கும் ஆளுபவர்களைப் போலவே சொந்தமான வீடுகள் இருக்கக்கூடாது. இந்த இரண்டு வகுப்பினரும் திறந்த பாசறைகளில் வாழ வேண்டும். அவர்கள், பொன், வெள்ளிபோன்றவைகளைத் தொடவும் முடியாது. அவர்களுடைய வாழ்க்கைத் தேவைகளெல்லாம் மூன்றும் வகுப்பினராகிய உற்பத்தியாளர்களால் தேடிக் கொடுக்கப்படும். அவர்கள் பொதுவாகவே உண்ணவேண்டும்.

ஆகவே பிளேட்டோவின் கம்யூனிசம், தற்கால கம்யூனிசத்தைப் போன்றதன்று. தற்கால கம்யூனிசத்தில் உற்பத்திக் கருவிகளெல்லாம் அரசாங்கத்துக்குச் சொந்தமாக இருக்கவேண்டும். தனிஉடைமை எவருக்கும் இல்லாதிருக்கவேண்டும் என்பது. ஆனால் பிளேட்டோ ஒரு சிலருக்குத்தான், முதல் இரண்டு வகுப்பாருக்குத்தான் கம்யூனிசம் அல்லது பொதுஉடைமை வேண்டினார். மேலும் அவர் விரும்பியது, நாட்டை ஆளும் அந்தஸ்திலுள்ளவர்கள், நாட்டைக்காக்கும்பொறுப்புள்ளவர்கள் ஆகிய இவர்கள் தங்கள் கடமையைச் சரிவர நிறைவேற்றி, அதிலிருந்து வழுவாமல் இருக்க ஏதுவாக ஒரு ஏற்பாடு வேண்டும் என்பதே. பொருள் தேடவேண்டிய அவசியம் — குடும்பத்தைக் காப்பாற்றவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு இருக்கக்கூடாது. நீதியின் பிரகாரம் அவர்கள் தங்களுக்கேற்பட்ட கடமைகளைக் கண்ணும் கருத்துமாக இருந்து சரிவர நிறைவேற்ற வேண்டியே அந்த ஏற்பாடு செய்யவேண்டும் என்று கருதினார். அரசோச்ச நியமிக்கப்பட்டவர்கள் தங்களுக்குத் தரப்பட்ட அதிகாரத்தை சொத்துமதியாகக் கொள்ளாது, மக்களின் பொது நன்மைக்காக ஏற்கப்படும் சுமையாகவும், இனிய கடமையாகவும் கொள்ள வேண்டும். அவர்கள் ஆட்சியைத் தம் மனம் போன போக்கின்படி மாற்ற முற்படக்கூடாது. அரசாங்கத்தை நிலையானதாக வைத்திருக்கவேண்டும்.

இம்மாதிரி நீதியுடன் நடக்கும் ஆட்சி அறப்பாதையில் செல்லும். அறமென்பது உண்மையை உணரக்கூடிய அறிவுதான் என்கிறார் பிளேட்டோ. முற்றிய அறிவை அடைந்தவனைத்தான் நல்லவன் என்றழைக்கலாம். இந்த அறிவு இயற்கையாகவே யாருக்கும் வந்துவிடாது. ஆதலால் அதைக் கல்வியின் மூலம்தான் புகட்டவேண்டும். ஆதலால் மக்களிடையே அறத்தை வளர்க்க அவர்களுக்கு கல்வியைப் புகட்டவேண்டும். ஆண், பெண், அனைவருக்கும் கல்வி அவசியம். கல்வி கற்பதன் மூலம்தான் அவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்து முடிக்கவும், பொதுவாகச் சமூகத்துக்குப் பயன்படக் கூடியவர்களாகவுமாவார்கள். அதனால்தான் கல்வி புகட்டுவதில் ஒரு நோக்கத்தையும் குறிக்கோளையும் முன் வைத்து—அதாவது நாட்டி-

லுள்ள மக்களனைவரும் நல்ல பிரஜைகளாக, அறநெறியில் செல்பவர்களாக இருக்கவேண்டும் — என்பதற்காக செய்யப்படவேண்டும்.

சட்டங்களைத் துணைகொண்டு மக்களைத் திருத்தினால் நிலையான பலன் கிடைக்காது. மக்கள் நடத்தையையே திருத்தி, அவர்களுக்கு நல்லறிவு புகட்டி, நன்னெறியில் கொண்டு செலுத்தி அவர்களைப் பக்குவப்படுத்திவிட்டால் சட்டங்கள் தேவையில்லை, மக்கள் நடத்தை பக்குவமடையாவிட்டால் சட்டங்கள் இருந்தும் பயனில்லை. அவைகள் ஏட்டில் இருக்கலாமே தவிர அவைகளால் பயனொன்றும் இல்லை.

ஆகவே, மக்களிடையே இருக்கும் தீங்குகளைக் களைந்து, அவர்களைத் தவறான வழியிலிருந்து திருப்பி அவர்களைப் பக்குவப்படுத்தவேண்டுமானால், அவர்களுக்குக் கல்வியறிவு புகட்டவேண்டும்.

எல்லோருக்கும் கல்வி புகட்டும்போது, அதில் தலைசிறந்த ஒரு சிலரே ஆளும் வகுப்பினருடன் சேர்க்கப்படுவர். மற்றவரெல்லாம் மற்ற இரு வகுப்புகளுக்கும் அனுப்பப்படுவார்கள். கல்வி புகட்டும்போது உடற்பயிற்சியின் அவசியத்தையும் பிளேட்டோ வலியுறுத்துகிறார்.

மேலே கூறப்பட்ட கருத்துகளெல்லாம் பிளேட்டோவின் 'குடியரசு' என்ற நூலில் காணப்படுகின்றன.

அடுத்தபடியாக அவர் எழுதிய அரசியல் மேதை (The Statesman) என்ற நூலில், முற்றிய அறிவுடையவனே அரசியல் மேதை என்று காட்டுகிறார். ஆட்சி புரிபவர் சிலரா பலரா அல்லது ஒருவரா, அவர் செல்வரா அல்லது வறிஞரா, அல்லது அவர் அதிகாரத்துக்கும் ஆணைக்கும் மக்கள்பணிகின்றனரா என்பதைப்பற்றி நாம் ஆராயத் தேவையில்லை. "நாம் விரும்பியோ, விரும்பாமலோ, வைத்திய சாஸ்திரத்தை நாம் படித்தோ படிக்காமலோ, அவன் பணக்காரனோ ஏழையோ, நம் நோயைத் தீர்ப்பவன்தான் மெய்யான வைத்தியன்" என்று கொள்கிறோமே, அதே போலத்தான், உண்மையான அரசியல் மேதை எவன் என்று கண்டு பிடிக்கவேண்டும்.

அரசியலமைப்புக்களை மூன்றாகப் பிரிக்கிறார், பிளேட்டோ. சட்டவரம்புக்குட்பட்டு, ஒருவர் ஆள்வதை முடியாட்சி (Monarchy) என்றும், சிலர் ஆள்வதை பிரபுக்களாட்சி (Aristocracy) என்றும், பலர் ஆள்வதை மிதமான மக்களாட்சி (Moderate Democracy) என்றும், சட்டத்தைத் துச்சமாக மதித்து யதேச்சாதிகாரமாக ஒருவர் ஆட்சி புரிவதை கொடுங்கோலாட்சி (tyranny) என்றும், சிலர் ஆள்வதை சுயநலப் பணக்காரர்களாட்சி (Oligarchy) என்றும், பலர் ஆள்வதை மிதமிஞ்சிய மக்களாட்சி (Extreme democracy) என்றும் கூறுகிறார்.

மேலும், அரசியலறிவு என்பது ஒரு கலை என்று கூறி, ஒவ்வொரு கலைஞனும் அவனவன் துறையில் யாருக்கும் கட்டுப்படாதவனாக ஓரளவு இலங்கியபோதிலும், அரசியலறிஞன் ஒருவனே பூரணசுயேச்சையுள்ளவன் என்றும் எடுத்துக் காட்டுகிறார். ஒரு நோயாளியின் சம்மதமின்றியே அவன் பிணியைப் போக்குவதற்கு ஒரு வைத்தியருக்கு எப்படி முடியுமோ, அதுபோலவே, ஆளுபவருக்கும் குடிகள் சம்மதமின்றியே எதையும் செய்ய எல்லையில்லாத அதிகாரம் இருக்கிறது. ஆனால், எப்படி தேர்ச்சி பெற்ற ஒரு வைத்தியன் நோயாளிக்கு நன்மையல்லாது தீமை செய்யமாட்டானோ அதுபோன்று தேர்ச்சி பெற்ற அரசியல் மேதை ஒருவன் குடிகளுக்கு நன்மையன்றி தீமை செய்யமாட்டான் என்று கருதுகிறார், பிளேட்டோ.

கடைசியாக பிளேட்டோ எழுதிய 'சட்டங்கள்' என்ற நூலில் சட்டங்களின் அவசியத்தைப்பற்றி வலியுறுத்துகிறார். சமூகத்தில் எல்லோருமே பொதுநலனைக் கருதி செயலாற்றுவதில்லை. அவர்களைக் கட்டுப்படுத்த சட்டம் தேவையாகியது. சட்டங்கள்தான் மனிதனை மிருகத்தன்மையினின்று உயர்த்துகிறது. ஆசைகளால் மனிதர்கள் பல போக்கில் இழுத்துச் செல்லப்படும்போது அவர்கள் நிலை குலையாமல், மிருகத்தன்மையைத் திரும்பவும் அடையாமல் அவர்களைக் காப்பாற்றுவது, பகுத்தறிவு, என்பது. அதுதான் சமூக சட்டங்களுக்கு அடிப்படை. இந்தச் சட்டங்கள் சமூகத்திலிருந்துவரும் பழக்கவழக்கங்களை ஒட்டியும் செய்யப்படலாம்.

"சட்டங்கள்" என்ற நூலில் அரசு எப்படித் தோன்றியது என்பதைப்பற்றி ஒரு புதுக் கருத்தைக் கூறுகிறார். ஆதியில் மக்கள் யாதொரு கட்டுப்பாடுமின்றி வாழ்ந்து வந்திருக்கவேண்டும்— பிறகு பொது நலனைக்கருதி தங்களுக்குள் ஒரு தலைவனை தேர்ந்தெடுத்து ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கவேண்டும். அரசன் யதேச்சாதிகாரமாய் நடப்பதில்லை என்றும் மன்னன் தான் கொடுத்த வாக்குறுதியை மீறுத வரையில் மக்கள் தாங்களும் அவனைக் கவிழ்ப்பதற்கு முயற்சிப்பதில்லை என்றும் வாக்குக் கொடுத்திருக்கவேண்டும். இப்படித்தான் அரசு ஏற்பட்டிருக்கவேண்டும் என பிளேட்டோ கருதுகிறார்.

மேலும் சமூகத்தில் ஓரளவு சமத்துவத்தை சட்டத்தின் மூலம் வளர்க்கவேண்டும். சட்டத்தின் மூலம் ஓரளவுக்குச் சமத்துவம் ஏற்படுத்தினபின், ஒரு சிலர் செல்வராகவும் மற்றுஞ்சிலர் ஏழைகளாகவும் ஆகாமல் சட்டத்தின் மூலம் தடுக்கவேண்டும், முதலில் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்குமேல் ஒருவருக்கு சொத்து சேர்ந்தால் அதை அரசாங்கம் பறிமுதல் செய்யவேண்டும் என்று பிளேட்டோ கருதினார்.

நடைமுறையில் மன்னராட்சி மக்களாட்சி இவை இரண்டும் சாத்தியமில்லை என்பது பிளேட்டோவின் கருத்து. ஆணை அல்லது அதிகாரம் (Authority) சுதந்திரம் (Liberty) ஆகிய இரண்டு தத்துவங்களை இந்த இரண்டுவித ஆட்சிகளும் அடிபபடையாகக் கொண்டுள்ளன. ஆனால் இவ்விரண்டு கொள்கைகளும் ஓரளவுக்குமேல் வற்புறுத்தப்பட்டால் அரசாங்கம் அழிந்துபோகும். ஆதலால் எதிலும் மிதமாக இருத்தலே (Moderation) நல்லது. ஆளுபவர் அதிகாரம் இருக்கிறது என்ற மமதையில் அதை அதிகம் பிரயோகிக்காமலும், மக்கள் சுதந்தரம் இருக்கிறது என்பதால் சட்ட திட்டங்களை துச்சமாக மதிக்காமலும் இருந்தால் தான் அரசாங்கம் நடைபெற ஏதுவாகும். அரசாங்கம் என்பது குடிகளின் சம்மதத்தின் மேல் நிறுவப்படும் சட்ட ஆட்சி. அதில் 'கட்டாயம்' என்பதற்கே இடமில்லை. இதுவே பிளேட்டோவின் முடிவுரையாகக் கருதலாம்.

(தொடரும்)

தொடர் சித்திரம்

# கடிகாரம்

7

அண்ணால்

எந்தக் கண்களை கமலமலர் என்று வர்ணிப்பேனோ, அந்தக் கண்களிலே அருவிகளைக் கண்டேன்! எந்த முகத்தை அன்றலர்ந்த செந்தாமரை என்று உரைப்பேனோ, அந்த முகத்தில் எரிமலையைக் கண்டேன்! வேறோர் சமயமாயிருந்து, நாச்சியின் வதனமும் நயனமும் இப்படியிருந்தால், துடிதுடித்துப் போயிருப்பேன். ஆனால் இப்போது! நாச்சி, கெட்டுப்போய்விட்டு அல்லவோ, வந்து நிற்கிறாள் என் எதிரே! எப்படித் தாங்க முடியும்? ஓங்கினேன், கையை! ஒரேகுத்து — சிறிது நேரத்துக்கு முன்பு, எந்த நாச்சி ஆசையோடு வாங்கிவந்து தந்தாளோ, அதே கத்தி, இதோ அவளுடைய உயிரை எடுக்கப்போகிறது!! எப்பேற்பட்ட மனைவி எனக்குக் கிடைத்தாள் என்றல்லவோ எண்ணினேன்—சந்தையிலிருந்து வந்த அவள், கத்தியைக் கொடுத்தபோது. இப்போது, தான் செய்த தவறை மறைக்க அவள் தந்த லஞ்சமாக்கப்பட்டது, அந்தக் கத்தி! எவ்வளவு அக்கிரமம் வேண்டுமானாலும் செய்துவிட்டு, ஆண்டவனுக்கோர் அர்ச்சனை செய்துவிட்டால் போதும்—அரையணாவுக்குச் சூடன் வாங்கிக் கொளுத்திவிட்டால் போதும் என்று நினைக்கிறார்களே, பக்தர்கள்; அது கவனத்துக்கு வந்தது எனக்கு. கோயில் தெய்வம், பேசாது! ஏனெனில் அது சிலை! நானும் சிலையா? அல்ல, அல்ல. மனிதன்! என்னையா, ஏமாற்ற முடியும், இவள்? "போ! ஒழிந்து போ! செத்துப் போ!" என்று கத்தியவாறே, அவளைக் குத்தத் தீர்மானித்துக் கத்தியையும் ஓங்கிவிட்டேன். யாரோ, கதவைத் தட்டும் சப்தம் கேட்டது! அதுவும் விடாமல் தட்டினார்கள். எப்படியிருக்கும் எனக்கு? அவளைப் பிடித்துத் தள்ளிவிட்டு, கதவைத் திறந்தேன்! என் தோழன் வீரப்பன் நின்றான்—வந்தவனாவது, நானிருக்கும் அலங்கோலத்துக்கான காரணத்தைக் கேட்டிருந்தால், ஓரளவு நிம்மதி ஏற்பட்டிருக்கும். பழி! பலி!! — என்றே, ஓலமிட்டுக் கொண்டிருக்கும் இதயத்துடன் இருந்த என்னை என்ன கேட்டான் தெரியுமோ? வீட்டிலே அவன் மனைவியைத் தேள் கடித்துவிட்டதாம்; வைத்தியரிடம் போய் மருந்து வாங்கி வரவேண்டுமாம்; நாலணா காசு வேண்டுமாம்— என் நிலையை என்ன கண்டான் அவன்.

என் மனைவி எதிரே நிற்கிறாள் தேளாக; அவனோ தேள் கடித்ததற்காக மனைவிக்கு சிகிச்சை செய்ய நாலணா கேட்கிறான், நாலணா. என்னிடம் ஏது நாலணா? இருந்ததையெல்லாம்தான் எடுத்துக் கொண்டுபோய் சந்தையில் வாங்கிய சாமான்களோடு வந்திருக்கிறாளே, சனியன். இல்லையப்பா என்றால் விடுகிறானா, "அண்ணி உங்களிடமாவது இருக்குமா?" என்று வீட்டுக்குள் பார்த்தவாறே கேட்டான். அண்ணியாம், இவள். அவளிடம் எனக்குத் தெரியாமல் காசிருக்கிறதா என்று கேட்கிறான் இவன்.

இந்த வீரப்பன்தான், நாச்சி, இட்லி கடை 'முதலாளி'யாக இருந்தபோது, என்னால் தூது அனுப்பப்பட்டு, தூயவள் என்ற தகவலை அறிந்துவந்து சொன்னவன். என்னுடைய ஆருயிர்த் தோழன்தான். ஆனால், நிலைமை எப்படிப்பட்டது? சந்தேகத்துக்காளானவள் உள்ளே; சஞ்சலத்துக்காளானவனாக நான். அவனுக்கு நாலணா வேண்டுமாம். 'இல்லை' என்று நான் அளித்த பதில், நிச்சயம் அவனைத் திடுக்கிடவைத்திருக்கவேண்டும் – 'அங்கென்னடா பார்க்கிறாய்?' என்ற சொல் அவனைத் திகைக்கவைத்திருக்கவேண்டும் — உடனே போய்விட்டான். என்ன நினைத்தானோ என்னவோ!

உள்ளே வந்தேன்; பெட்டிக்குள் அடங்கிய பாம்புபோலச் சுருண்டு கிடந்தாள், நாச்சி. கதவை மூடிக்கொண்டுவரும் என்னைக் கண்டதும், பலிமேடையிலே நிற்கும் ஆட்டைப்போல விழித்தாள்.

நானா விடுவேன்; அதுவும் என்னை ஏமாற்றிய காதகியை......! தலையைப் பிடித்துத் தூக்கினேன்— 'சொல்லடி, இல்லையென்றால்......' என்று அலறினேன். விரித்த கத்தி, என் கையிலேயே இருந்தது. 'சொல்கிறேன்' என்று விம்மும் குரலில் சொன்னாள்; பிடியைத் தளர்த்தினேன். காலிலே வீழ்ந்தாள், கதறினாள். 'உண்மையைக் கேட்டதும் என்னை உதாசீனம் செய்யமாட்டீர்களே?' "செய்யமாட்டேன், சொல்"—இந்தப் பதிலைத்தானே கூறமுடியும், எவரும். நானும் சொன்னேன். அவள் கேட்ட கேள்வியிலிருந்து நான் கொண்ட சந்தேகம் உறுதியாயிற்று. தவறியது உண்மை; அந்தத் தவறை மன்னித்து அவளை உதாசீனம் செய்யாமலிருக்க வேண்டுமாம், நான்! உறுதி கேட்கிறாள் என்னை. "இருக்கட்டும்; விஷயம் தெரியட்டும்; உன்னையும், என் பொருளான உன்னைக் கட்டிலறைக்கு அழைத்தவனையும் சேர்த்துத் தொலைக்கிறேன்" என்று கருவிக்கொண்டபடியே 'சொல்' என்றேன். விரித்த கத்தி என் அருகே கிடந்தது. கொதித்த உள்ளத்துடன் கயிற்றுக் கட்டிலில் அமர்ந்தேன், நான். கண்ணீரும் கம்பலையுமாய், அவள் சொல்லலானாள்.

## நாச்சியின் கதை

"உண்மையில் கடவுளுண்டோ!
இல்லையோ!!
உணர்ந்திடுவாய் தமிழா, நீ?
ஆண்டிக்கூட்டத்தால் அழியும் உன்காசு—
அவனியில் இப்பேச்செல்லாம்
வெறும்தூசு!
ஒருவன் மாடியிலும் மற்றொருவன்
கோடியிலும்
உலவிட ஏன் வைத்தான்?
ஒருவன் பந்தியிலும் இன்னொருவன்
சந்தியிலும்
உலவிட ஏன் வைத்தான்?

அடிக்கடி உங்களிடம் பாடிக் காட்டுவேனே, இந்தப் பாட்டு, சின்னஞ் சிறுமியாயிருந்தபோது நான், கேட்டது. இதன் பொருள் எதுவும் புரியாதவயது அப்போது! மரப்பாச்சிவைத்து விளையாடும் குழந்தைகள், 'கலியாண விளையாட்டு' ஆடுமே, அர்த்தம் புரிந்தா அவைகள் விளையாடுகின்றன? எனினும் தொண்டு கிழமாகிவிட்டாலும் அந்தச் சிறுபிராயத்து நிகழ்ச்சியைச் சொல்லிச் சொல்லிப் பூரிப்பதுண்டல்லவா? அந்தப் பூரிப்பு, இப்போதுகூட எனக்கு ஏற்படத்தான் செய்கிறது! என் மீது, சந்தேகம் வைத்துவிட்டீர்கள்—நீங்கள். அதனாலேயே, எல்லா விவரத்தையும் கூற விரும்புகிறேன். அந்திவானத்தில் தென்படும் வர்ணங்களை வைத்து, ஒரு ஓவியன் சித்திரம் தீட்டமுடியாது! ஏனெனில், அந்த வர்ணங்கள் அவ்வளவு விரைவில் மாறிடக் கூடியவை!! அதே போலத்தான், மனிதர்களிடத்தில் தென்படும் ஒரு குணாதிசயத்தை வைத்து, 'இவன் இப்பேற்பட்டவன்' என்று முடிவு கட்டிடமுடியாது. இதோ, இந்தக் கடிகாரத்தை நான் வைத்திருப்பதால்—என்னைத் திருடியென்றோ தேவடியாள் என்றோ எண்ணக் கூடும்! அவசரப்படாதீர்கள்—என் கதையை, யாரிடமும் சொல்ல வேண்டும் என்று நான் எண்ணியதில்லை. தங்களிடம் கூடச் சொல்லியதில்லை—'இட்லி கடை' யிலிருந்து என்னை, தங்கள் இதய வீட்டிற்கு அழைத்துக் கொண்டீர்கள். இதுவரையில் ஒரு தடவை கூட, நான் யார், ஏனிக்கதி பெற்றேன் என்பதைச் சொல்லியதில்லை. வானத்தில், எத்தனையோ வர்ண மாறுதல்கள் ஏற்படுவதுபோல, ஒவ்வொருவரின் வாலிபத்திலும் எவ்வளவோ நிகழ்ச்சிகள் ஏற்படுவதுண்டு. கண்டதே காட்சி, கொண்டதே கோலமெனக் கருதும் பருவம் அது!! அந்தப் பருவத்தைக் கடந்துவிட்டேன்—நிர்மலமான ஆகாயம் போலிருக்கிறேன்—அதனால் தான், இவ்வளவு நிம்மதியோடு பேசுகிறேன். கத்தியால் என்னைக் குத்துங்கள்! ஆனால், அதற்குமுன் என் கதையைக்கொஞ்சம் கேட்டுக் கொள்ளுங்கள்!! சிறுவயதில், நான் சென்று பார்த்த நாடகம் ஒன்றில் பிச்சைக்காரனொருவன் பாடக் கேட்டேன். இளமையின் நினைவுகள், இதய ஏட்டின் தங்கச் சித்திரங்களாமே!

அதனால்தான் போலும், அந்தப் பாட்டு, என் கவனத்தைவிட்டு, இன்னும் மறையவில்லை. அந்த நாடகத்தைப் பார்க்கச் சென்றபோது, நான் ஓர் ஆடிக்கிடந்த பொன் விளக்கு! சலங்கை பூட்டிய வண்டியில், அப்பா தூக்கி உட்காரவைக்க எவ்வளவு ஆனந்தத்தோடு செல்லுவேன்? அம்மா! அம்மா!!—என்று கொஞ்சியோர் தொகைதான் எவ்வளவு?........ஊம்.... காலப் பறவையின் நேரத்துளிகளை நெஞ்சம் சந்திக்கமுடியுமே, கைகளால் இனித் தொடவா முடியும்? அந்தக் காலம் எனக்கோர் வசந்தம்! நாடகத்தில் கேட்ட பாட்டை, அப்பா, அடிக்கடி என்னைப் பாடச் சொல்லுவதுண்டு. நான் படுசுட்டி! கேட்டதை அப்படியே ஒப்புவிப்பேன். அதனால், அப்பா, யாராவது வேண்டியவர்கள் வந்திருந்தால் என்னைக் கூப்பிட்டு அந்தப் பாட்டைப் பாடச் சொல்வார் — கேட்டவர்களும், அபாரம், அருமை, நல்ல சங்கீத ஞானம் இருக்கிறது, என்றெல்லாம் புகழுவார்கள். ஆனால், இன்று! அந்தப் பாட்டை நினைத்துப் பார்த்தாலே, பயமாயிருக்கிறது!! **"உண்மையில் கடவுள் உண்டோ! இல்லையோ!!"**—இந்த வரிகளை வீதியில் பாடிக் கொண்டுபோனால், சும்மா விடுவார்களா, ஜனங்கள்? ஆனால் நாடகத்தில்வந்த பிச்சைக்காரன் எவ்வளவு சுலபமாகப் பாடிக்கொண்டு சென்றான்! நாடகத்தில் இரவு ராஜாவாகயிருந்து ஆர்ப்பாட்டம் செய்யும் நடிகன் விடிந்ததும் 'அண்ணே, அரையணா இருக்கா!,' என்றுதான் கேட்பானும்—இதை அப்பா சொல்லுவார், "நாடகத்தில் வரும் நடிகனைப்போல, மனிதன் ஒவ்வொருவனுக்கும் இரண்டு வாழ்க்கையுண்டு! ஓரிடத்தில் அவன் ராஜாவாகச் சோபிப்பான் — மற்றோரிடத்தில் பிச்சைக்காரனாகக் காட்சிதருவான். மதனா, என்பாள் மனைவி! அவளையே குரங்கே என்பாள் எஜமானி!! மதனன் என்றதால் தலைக் கிறுக்கும் வந்துவிடக் கூடாது, குரங்கே என்றதால் மனம் ஒடிந்துவிடவும் கூடாது! மேடும், பள்ளமும் நிரம்பிய இந்தச் சமூகத்தில் வாழ ஒவ்வொரு மனிதனும் இரட்டை வாழ்வு நடத்தித்தான் தீரவேண்டியிருக்கிறது!", என்பதாக. இதெல்லாம், எனக்கு, அப்போது புரியக்கூடியவயதா!!

ஆனால், இப்போது? எவ்வளவு அனுபவ பூர்வமான உரைகள் அன

## கள்ளின் தித்திப்பு!

—: சீனி :—

★

பாம்பின் அழகினிலே—சொக்கிப்
பக்கம் படுப்பாரோ?
தாம்பின் வனப்பெண்ணிக்—காளை
தறியினைப் பூண்டிடுமோ?

கம்பன் கவிகளிலே—உள்ள
கற்பனை மேன்மையினை
நம்பிப் பரப்புவதால்—நந்தம்
நாடு நசியுதடா!

மாற்றான் மதிப்படைய—நம்மின
மன்னவன் தாழ்வடைய
சாற்றிய பாடல்களில்—இனிமை
தவழ்தல் சுவைதருமோ?

குறள்சொல் இனத்தவரைப்—பெருங்
குரங்குகள் கூட்டமென்றே
அறையும் கவியமுதில்—நீ
ஆழ்ந்து கிடப்பதுவோ?

நம்பிட வேண்டுமென்றான்—வடக்கர்
நம்மின ஆண்டவராய்க்
கும்பிட வேண்டுமென்றான்—கவி
கூறிக் கெடுத்துவிட்டான்!

செய்யுள் செழிப்புடையான்—தன்கவித்
திறமை செலவழித்தே
நெய்த பெருநூலில்—தாயை
நிந்தனை செய்துவிட்டான்!

தாய்தன் மானத்தினை—விற்கும்
தமிழன் புகழிசைக்கும்
ஓய்தல் இலாதவரே—நீவிர்
உண்மைத் தமிழினமோ?

மேன்மைத் தமிழ்வளர்ப்போம்!—சங்கம்
மீட்டிய யாழிசைப்போம்!
தேன்சுவை கண்டிடுவோம்!—கள்ளின்
தித்திப்பை நாம்வெறுப்போம்!

பதை உணருகிறேன். "உண்மையில் கடவுள் உண்டோ! இல்லையோ!!"—இந்த வரிகளை, உரத்துப் பாட வேண்டுமென்ற ஆசை பல சமயங்களில், எனக்கு வரும். நான் பட்டமரம் தான்! பச்சைத் தளிர்களே இல்லாதவள் தான்!! ஆனாலும் உயிரை, ஊஞ்சலாட்டி ஓட்டிட வேண்டுமல்லவா? அது போன்ற விரக்தியான நேரங்களில் எனக்கு விருந்தாக அமைவது, இந்தப் பாட்டுதான்! 'செவிக் குணவில்லாத போது, சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்', என்றாராம் திருவள்ளுவர். என்னைப் பார்த்திருந்தால், வள்ளுவர் தன் குறளை நிச்சயம் மாற்றிக் கொண்டிருப்பார், ஏனெனில், நான் இது போன்ற பாடல்களைப் பாட ஆரம்பிப்பது, பரிமளமான பாக்குத்தூளைப் போட்டுக் கொண்டு, பன்னீர் தெளித்த கட்டிலிலே, பக்கத்திலே பழரசம் தந்தபடி கண்ணாளனிருக்க, என் கரத்திலிருக்கும் கனியை அவர் கடிக்க, தரமுடியாதென நான் தாவ, வீணையை அவர் மீட்ட, நான் மென்குரலைக் காட்ட, இரண்டில் எது உயர் வென்ற ஐயத்தில் அவர் ஆழ...... இப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலா? செச்சே! இட்லி கடை! சிறு குடிசை! குப்பைமேட்டுப் புழு எங்கே! கோபுரத்துக் கலசமெங்கே! இட்லி வியாபாரத்திலிருந்தபோது தன்னந்தனியாயிருக்கும்போது, என்னை அறியாமலே இந்தப்பாடல் வெளிவரும்! ஆச்சரியமாயிருக்கலாம், உங்களுக்கு. அனாதையாக வாழ்ந்த ஒரு பெண்ணுக்கு, துயரங்கள் தாக்கினாலும், வேதனைகள் விளைந்தாலும், அதை வெளிப்படுத்த பாட்டுத்தானா கிடைத்தது என்று! ஆமாம், பெண்களின் வருத்தத்தை வெளியிட இருப்பது, ஒப்பாரிதான். பெண்ணினத்தின் துயரச் சங்கு அதுதான்! ஆனால், அந்தச் சங்கை எப்படி ஊதுவது என்றே எனக்குத் தெரியாது. அதைக் கற்றுக் கொள்ளும் வயதிற்கு வருமுன்பே, என் தாய் செத்துவிட்டார்கள். பெற்றெடுத்த அன்னைக்கு எப்படித் தெரியும் — என் வாழ்க்கையே ஒப்பாரிமயமாக ஆகப்போகிறதென்ற உண்மை?

"குழந்தை சிரிக்கும்போது, கன்னத்தில் குழிவிழுகிறது பாருங்கள் அதுவே, போதும். ஆகா! ராணி மாதிரி வாழப் போகிறாள்" — என்பார், எங்கள் வீட்டுக்கு வரும், அக்கிரகாரத்து ஐயர். என் அப்பாவுக்கு, இதிலெல்லாம், நம்பிக்கை அதிகம். எனக்கு சுருட்டைத் தலை. அதைப் பார்த்து, ஒருவர், சொன்னாராம்! "ஆகா! குழந்தை பகு குஷியா வாழும். ஐ. சி. எஸ். படிச்சவனுக்கு வாக்குப்பட்டு, காரும் பங்களாவுமா, லட்சுமியாட்டமா ஜொலிக்கும்," என்பதாக. இவைகளைக் கேட்டதாலோ, அல்லது ஒரே மகள் என்பதாலோ, என் தந்தை என்னைச் செல்லமாக வளர்த்து வந்தார். சொந்த ஊர், திருவாரூருக்குத் தெற்கேயிருக்கும் தேவூர். அப்பா பெயர், பாக்கியநாதப் பிள்ளை. சின்னஞ்சிறு கிராமம்தான் எங்களூர்! ஆனால், எவ்வளவு அழகானது தெரியுமா? தண்ணீர் பாய்ந்தோடும் ஆறும், அதிலிருந்து பிரிந்தோடும் வாய்க்கால்களும், நீர் நிரம்பிய சின்னஞ்சிறு குட்டைகளும், ஊரைச் சுற்றி, பச்சைப் பசேலென்ற வயல்களும் அதை நோக்கி கலப்பை ஏந்திய வண்ணம் செல்லும் குடியானவர்களும், அடடா, இயற்கையன்னையின் எழில் மிகு சோலையைப் போல் காட்சி அளிக்கும். தைமாதத்தில், அறுவடைக்கு முன்பு, அந்தக் கிராமங்களைப் பார்த்தால், பொன்னாடை போர்த்தியது போல இருக்கும், "இவ்வளவு செழிப்பாக இருப்பதால்தான் நம்ப ஜில்லாவில் மட்டும் கோயில்கள் அதிகம் இருக்கிறது." என்பார், என் அப்பா. நான், அப்போதே, குறும்பாகச் சொல்லுவேன், "பாம்புப் புற்றுகளும் நிறைய இருக்கின்றன!", என்று. ஏனெனில், கோயிலுக்கருகில், பெரிய பாம்புப் புற்று உண்டு! அது இருக்குமிடத்தில், பெரியதோர், ஆலமரமிருக்கிறது. எங்கள் ஊர்ப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகளுக்கு, அந்த மரத்தடிதான், விளையாட்டு மைதானம். ஆனால், அப்பா, அங்கே போகச் சொல்லமாட்டார், என்னை. ஏனெனில், பாம்புப் புற்று, இருக்கிறதாம்! பாம்பு கடித்து விடுமாம் — பயம். ஆனால், வருஷா வருஷம், அறுவடையானதும், எல்லோரும் அந்தப் பாம்புப் புற்றுக்குப் படையலிட்டு, திருவிழா, கொண்டாடுவார்கள். ஆனால், அக்கிரகாரத்தாருக்கு மட்டும், இந்தத் திருவிழா, பிடிக்காதாம். ஏனெனில், பெரிய தெய்வம் கோயிலிலிருக்கும் போது, சில்லறைத் தெய்வங்களை ஏன் கும்பிட வேண்டும்? — என்பது, அவர்கள், கட்சி,

"சின்னதோ, பெரியதோ — எல்லாம், தெய்வங்கள்தானே—எல்லாவற்றையும் பூஜிப்பதால் என்ன நஷ்டம்?"—இது, எங்கள் அப்பா, கட்சி.

எனக்கு இந்தக் கட்சிகள் எல்லாம் புரியாது. சனிக்கிழமை தோறும் பெரிய கோயிலுக்கும் வெள்ளிக்கிழமைதோறும் அம்மன் கோயிலுக்கும் அழைத்துப்போகும் அப்பா, தினசரி விளையாட மட்டும் ஆலமரத்துச் சாமித் திடலுக்கு ஏன் அனுப்பமறுக்கிறார்? இதனால்தான், கோயில் பெருமைகளைக் கூறும்போது, பாம்புப் புற்றைப்பற்றியும் நான் சொல்வது வழக்கம்.

"குழந்தை ரொம்ப புத்திசாலி!"—நான், கோயிலையும் பாம்புப் புற்றையும் பற்றிப் பேசும் போது, யாராவது இருந்தால், அவர்கள், அப்பாவிடம் இப்படிக் கூறுவதுண்டு.

மனித சுபாவமிருக்கிறதே, அது, முருங்கைக் கிளையைப் போல! கொஞ்சம் பிடித்தால் போதும், ஒடிந்து விடும். அதைப் போலத்தான், யாரையாவது வசப்படுத்தி தம்முடைய காரியங்களைச் சாதித்துக் கொள்ள வேண்டுமென்றால், அவருடைய குழந்தை அல்லது அவரது வீட்டழகு இப்படி, எதையாவது அதிகமாக வர்ணித்தால் போதும், காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம்.

இப்படிப் பட்டோர், என் தந்தையிடம், அதிகமாக வருவர். ஏனெனில், அவர்தான், சுற்று வட்டாரத்திலேயே பெரிய மனிதர்—நாற்பது வேலி நஞ்செய் புஞ்செய்களுக்கு ஏகப் பிரதிநிதி அவர்தான். நூறு விவசாயிகள், அவருக்குச் சொந்தம், பெரிய பண்ணையாரின் மகள் என்றால், கொஞ்சுவோரும், அஞ்சுவோரும், புகழ்வோரும், போற்றுவோரும் ஒருவரா! இருவரா!!

அவர்களெல்லாம் புகழ்ந்த வார்த்தைகளுக்கு உருவம் இருந்து, அந்த உருவங்களை யெல்லாம் அடுக்கி வைத்தால், தஞ்சாவூர் கோபுரத்தைவிடப் பெரியவளாக நான் இருப்பேன்! ஆனால், என்னுடைய இன்றைய நிலை என்ன? கோபுரமா! அல்ல, அல்ல. பாம்புப் புற்று!!

(வளரும்)

# திராவிடநாடு

காஞ்சி] 26—12—54 [ஞாயிறு


## வருக! வருக!!

★

ஆழ்கடலுக்குள் கிடக்கும் முத்து, மாடிவீட்டரசியின் மார்பிலே கிடந்து புரள்கிறது! அதளபாதாளத்தில் கிடக்கும் தங்கம், சீமாட்டியின் உடலிலே மின்னுகிறது! கறம்பு நிலத்தை, விளையும் கழனியாக்கியதால் உண்டான சம்பா அரிசி, சன்னிதானங்களின் கூடத்திலே, கொட்டப்பட்டு — திருமேனிகள் வாழப் பயன்படுகிறது!! பூமியன்னையின் மடியிலிருந்து கிடைக்கும் ஒவ்வொரு பொருளும், மாடி வீட்டுக்கும், மாதுசிரோன்மணிக்கும், சன்னிதானத் திருச்சேவைக்கும், செல்ல— அருமையான பாதை ஆண்டுகள் பலவாக, அமைக்கப்பட்டு, அமுலாகி வருகிறது! ஆனால், அந்தப் பொருள்களை, மூச்சடக்கி, உயிரிழந்து எடுக்கும் உழைக்கும் இனமோ, ஒரு முறை கூடத் தொட்டு அறியாது!! அப்படித் தொட ஆசைப்பட்டால், அது கூடாது என்று கொட்டும் அடக்குமுறைப் பாதையும் அமைக்கப்பட்டு, அருமையாக அமுல் நடத்தப்பட்டு வருகிறது! கழனிகளுக்குப் பாய்ச்சுவதற்காக, வாய்க்கால் வெட்டுகிறான், ஏழை — பாம்பும் தேளும் மிரட்ட, மண்வெட்டி சில சமயங்களிலே காலைப் பதம்பார்க்க, வியர்வையும் பெருமூச்சும் செலவழிய, கஷ்டப்பட்டு வெட்டிய வாய்க்கால். அதன் மூலம் வரும் நீர், கண்ணாடி போலக்காட்சிதருகிறது! அந்த நீரின் அழகையும், அதன் மேல் மிதக்கும் குமிழிகளையும், பாராட்டி பாவாணர்கள் பலர், பண்ணும் அமைப்பர்— ஆனால், அந்த நீரோ, கழனிகளுக்குச் செல்வதில்லை. கதிர்கள், வாடுகின்றன — கவனிப்பாரில்லை — நீரோ, வீணாக எங்கோ திறந்து விடப்பட்டு, விரயமாகிறது. இந்த வேதனையைக் கண்டு, வெந்து வெந்து, வேறு வழியில்லையெனக் கண்டதால் எழும்பிய உரிமை முழக்கமே, எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத நிலவென்று சங்கே முழங்கு!—எனும் சங்கநாதம், இந்த நாதத்தை, இனிமையெனக் கருதி, குதூகலிக்கும் பாட்டாளிகள் இனமும் அதே நேரத்தில், அபாய அறிவிப்பென எண்ணி மிரளும் ஆண்டான் குடும்பங்களும், உலவிடும் கூடாரமாக இருக்கிறது, நம் நாடு!

இந்த உண்மையை, அறியாதோர், இல்லை இங்கே. ஏழை நசிகிறான்! பணக்காரன் வாழ்கிறான்!!— எனும் பல்லவியைப் பாடாதோரில்லை. சகல அரசியல் கட்சிகளுக்கும், அதுதான் ஆரம்பப்பல்லவி! ஆனால், பண் இமைப்பதில், முறை தவறியும், சாகித்யம் அமைப்பதில் தவறுகளைக் கடைப்பிடித்தும், பல கட்சிகள் தமக்கு இஷ்டமான பாதையில் ஓடி, ஏதேதோ செய்து கொண்டிருக்கின்றன. சீமானின் காலில் விழுந்தால், பொட்டிருக்கும் பொன்னாபரணத்தைக் கழட்டித் தந்திடுவார்—'பூதானம்' 'பணதானம்' கேட்பீர்—என்போரும் உண்டு! சீமான்களிருப்பதால் தான் நாட்டுக்கே அழகு மலர்கிறது—அதனால் அவர்களிருக்கட்டும் — அதே நேரத்தில், தங்கம் எடுத்துத்தரும் நமக்குச்சரியான கூலி கொடுத்துவிட்டால் போதும்-எனும் கட்சியும் உண்டு! தங்கத்தை நாமே தோண்டியெடுத்து, 'டில்லி'க்குக் கொண்டுபோய்ச் சேமித்துவைத்து, வேண்டும்போது கேட்டு வாங்கிக்கொள்வோம் எனும் 'அகில இந்திய' ஆசைக் கட்சியும், உண்டு!! யாரிடம் இருந்தாலென்ன, எல்லோரும் மனிதர்கள்தானே, மகேசனின் படைப்புத்தானே மனித மந்தை, இதில் ஏன் வேற்றுமை, பொன்னும் மணியும் சதமோ, போற கதிக்கு நல்லது அளிக்குமோ, மாயமே வாழ்வே! காயமே பொய்! போடு, காசை!-எனும், போதகர்களும்உண்டு. இத்தனை ரகங்களையும், இன்று நேற்றல்ல, நீண்ட நாட்களாக அனுபவிக்கும் ஏழையினம்—நாம்! இதனால் தான், நமக்கென ஓர்பாதை வேண்டும்—இதுவரை அமைக்கப்பட்ட பாதைகள் அனைத்தும் யாருக்கோ பயன் தருகின்றன—இப்படி அமைந்த பாதையால் இன்பம் கிடைப்பது அரிது—எனவே புதுவழி செல்ல வேண்டும், என்று பொருமி பொருமி, கடைசியில் கண்டிருக்கிறோம், ஒரு புதுவழி! அந்தவழி, மற்றக் கட்சிகளைப்போல, குழப்பும் கொள்கைகளைக் கூறவில்லை; வாழும் வழியைத் தெளிவாகக் கூறுகிறது; கிடைக்கும் தங்கமும், விளையும் அரிசியும் வீணர்தம் திருமேனிக்கு விரயமாகும் பாதையை அடைக்க வேண்டுமெனச் சொல்கிறது; பெற்ற பலனை நாமே அனுபவிக்கவேண்டும்; பெற்ற பொருளும் நம்மிடமே இருக்கவேண்டும்; அதை நமது விருப்பப்படி செய்யும் உரிமையும் பெறவேண்டும்; ஆதலால், மாவீரர்காள்! பொதுவுடைமையும் பொதுவுரிமையும் காண்போம் – நமக்கென ஓர் நாடு பெறுவோம்-நாமெல்லாம் வாழ்வோம், என்று அறைகூவல் விடுகிறது, திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்த நல்முழக்கம், நலிவோரின் நரம்புகளிலே உண்டாக்கும் நம்பிக்கை நாதத்தின் விளைவாக, நாடெங்கும் நமது கழகங்களின் கிளைகளைக் காண்கிறோம்— அந்தப் பாசறைகளை, மூச்சடக்கி முத்து எடுத்தவனும், உயிரைப் பொருட்படுத்தாது சுரங்கம் நுழைந்து சுகப் பொருள் தேடிக் கொணருபவனும், பயிர்வளர்த்து கதிர் தருபவனும், தன்னுடையது! தன்னுடையது!! எனக் கூறி, அதன் வளர்ச்சியே தன் வாழ்வின் திறவுகோல் எனும் பெருமிதத்துடன்: கட்டிக் காக்கின்றனர். ஆர்வம்! அறநெறி! ஆனந்தம்! குதூகலம்!—இத்தனையும், அலைமோதுகிறது, பாசறை வீரர்களின் மனதிலே. இந்த நல்லுணர்ச்சி, நாட்டில் உலவும், பல கட்சிகளுக்குக் கிடைக்கவில்லை! 'எங்கே, கிடைத்தது—இவர்களுக்கு? நாடகம் ஆடியதாலா! நன்றாகப் பேசுவதாலா! அழகெழுத்தைத் தீட்டுவதலா!! எப்படி? எப்படி?' என்று ஏங்கி, இவைகளாலேயே நாம் வளர்ச்சி பெற்றோம் எனக்கருதி, ஏதேதோ செய்கின்றனர்! இதனால், ஆளும் கட்சி, இந்த முறைகளுக்குத் தடைபோட முயல்கிறது— ஆட்சியிலில்லாமல் வெளியே இருக்கும் கட்சிகள் 'கானமயிலாட'க் கண்டிருந்த வான்கோழிகளாகி, தாம், தீம்!! எனத் தாண்டவமாடுகின்றன! நாட்டின், நிலை இது. பிறர்கண்டு மயங்கவும் — பலர்கண்டு மிரளவும்— ஆள்வோர் திகைக்கவுமான அளவுக்கு, தி.மு.க. எப்படி பெற்றது இந்த நிலையை!

தொண்டர் தம் பெரும் பணியா — ஆமாம்! ஆனால், அதுமட்டுமல்ல, காரணம்!! மக்கள் தரும் ஆதரவா— ஆமாம்! ஆனால், அந்த மக்கள் ஏன் தருகின்றனர், ஆதரவு? காங்கிரஸ்காரர் சொல்லுகிறார், மயக்கு மொழியால் கிடைத்ததென்று! கம்யூனிஸ்டு கருதுகிறார், அழகு தமிழ் நடையும் நாடகமும் போடுவதால் என்று!! பலர் திகைக்கின்றனர், என்ன காரணமென்பதை அறியாத காரணத்தால்!!! உண்மையென்ன? வாய்ப்பும் வசதிகளுமற்ற கழகம், ஆலமரம்போல் வளர்ந்திருப்பதற்குக் காரணம் என்ன —ஏழைப் பாட்டாளிகளை வாழ்விக்க வேண்டும் என்கிற உண்மையான எண்ணமும், அதனைப் பெற நாம் வகுத்துக்கொண்டிருக்கும் கொள்கைகளுமே யாகும்!! பிறர், நுழைய அஞ்சும் குகைகளிலே, துணிவோடு சென்று, துந்துபி முழங்குகிறோம், நாம்—திராவிடநாடு திராவிடருக்கே! அது பெற்றால் இன்பம் நமக்கே!!— என்று கூறுகிறோம்.

இந்த இலட்சிய முழக்கம், தித்திக்கும் தேனாக ருசிப்பதாலேயே, கழகம் பவனிவருகிறது நாட்டில்! அதன் சின்னமாக, பல கிளைக் கழகங்கள், திக்கெங்கும்!! இவைகளிலே, தமிழகத்துக்குள் மட்டும் உலவும் கழகங்

# திராவிட நாடு
# பொங்கல் மலர்

சிந்தனைப் படைப்பு! பகுத்தறிவுத் தேன்கூடு!!

★

எந்த ஆண்டும்
இல்லாத
சிறப்புகளுடன்

★

எண்ணரக் குவியல்கள்!
வண்ணச் சிறப்புகள்!!

★

அண்ணாதுரை
அளிக்கும்
கதை--கட்டுரைகளுடன்

★

மூன்று கலர் ஆர்ட் அட்டை
120 பக்கங்கள்
விலை ரூ. 1—8—0


களைத் தவிர்த்து, பிற இடங்களில் நிறுவப்பட்டிருக்கும் கழகங்களும் உண்டு! கடல் கடந்து சென்றோரிடையிலும், வெளி மாகாணம் சென்று வாழ்வோர் மத்தியிலும், பல கழகங்கள் ஏற்பட்டு ஆங்காங்கே பணிபுரிகின்றன.

அண்டை அயலிலிருக்கும் கேரளத்திலும் ஆந்திரத்திலும், கன்னடத்திலும் கூட கிளைகள் உண்டு!! கூட...!—என்று, குறிப்பிடும் நிலையிலிருந்தே, அங்கெல்லாம் நுழைய, நமக்கிருக்கும் ஆவலும், ஆனால் அதற்குத் தடையாகயிருக்கும் வசதிக் குறைவுகளும், மக்களுக்குத் தெரியும். எனினும், ஏதோ ஓரிடம் இரண்டிடம் என்று துவங்கி பிறகு பல இடங்களிலே கிளைகளை நிறுவி, வளர்த்து, 'நாங்கள் குடியிருக்கும் வாகையைப் பார்க்க வாரீர்!' —என்றுஅன்பழைப்பு விடுக்கும், கழகங்கள் ஏராளம். அவைகளின் வரிசையிலே, பெருமிதமாக நடைபோடும் கன்னட நாட்டுக்காளைகள், இப்போது நம்மையெல்லாம், வருக! வருக!! என்று, ஆவலோடு அழைக்கின்றனர்!

பூக்கும் புத்தாண்டின் முதல் நாளிலும் இரண்டாம் நாளிலும் பெங்களூரில் முதன்முதலாக கருநாடக தி. மு. க. மாநாடு நடைபெறப்போகிறது. முதல் நாள் நடைபெறும் சீர்திருத்த மாநாடு, தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் தலைமையில், தோழர் ப. உ. சண்முகம் துவக்கித்தரவும், இரண்டாவது நாள் அரசியல் மாநாடு தோழர் என். வி நடராசன் தலைமையில், தோழியர் அருண்மொழி ஆரம்பித்து வைக்கவும், அதிவிமரிசையுடன் நடக்க இருக்கிறது. கழகப் பிரச்சாரகர்கள் பலரும் பங்கு கொள்கிறார்கள். இசையும், நாடகமும் வழக்கம்போல—அங்கும் உண்டு.

இந்த அரிய காட்சியைக் காண எல்லோரையும் மனமுவந்து அழைக்கின்றனர், வரவேற்புக் கழகத்தினர். கோலாரிலும், சுற்றுப்புறங்களிலும், வியர்வையைச் சிந்தி வாழப் போராடும், நமது சகோதரர்களின் அன்பழைப்பை ஏற்று மாநாட்டினை வெற்றிக் காட்சியாகுமாறு எல்லோரையும் அழைக்கிறோம்.

புதுவழி செல்வோம்; வெல்வோம்—எனும் நம்பிக்கை ஒளிபெற, நல்லோரே, எல்லோரும் வாரீர்! வாரீர், பெங்களூர் மஜீத் பந்தலுக்கு!!

★

## சிறையில் ராதா

கொள்கையின்படி நடந்து கொள்வது, வேடிக்கையல்ல, பொழுதுபோக்கல்ல! பழைமையின் பலமான பிடியிலே சிக்கிக்கொண்டுள்ள நாட்டிலே, முற்போக்குக் கொள்கைகளைக் கடைப்பிடித்து நடக்கவிரும்புபவர், எத்தகையஇன்னல்களையும் இழிமொழிகளையும் பழிச்சொற்களையும் தாங்கிக்கொள்ளவேண்டி நேரிடும் என்பதை எல்லாம், அறியாதார் இல்லை. எனினும், இன்னல்வந்து மிரட்டுகிற போது, வீரம் உலர்வதும், புதிய வாதங்கள் பிறப்பதும், காண்கிறோம்.

நடிகவேள் எம். ஆர். ராதா சிறையில் இருக்கிறார்—கொள்கையில் உள்ள உறுதி, உரத்த குரலில் பேசுவதில் மட்டுமில்லை, ஊராள்வோரின் கோபத்தைத் தாங்கிக்கொண்டு, கஷ்டநஷ்டத்தை ஏற்றுக்கொள்வதிலேதான் இருக்கிறது, என்பதை எடுத்துக் காட்டும் வகையில்.

கலை உலகில், இதுபோலச் சம்பவங்கள், அடிக்கடி காணமுடியாது.

கலை உலகு இங்கு ஒரு பிரச்சினையாகிவிட்டது என்பதை, ராதாவின் சிறை வாசமும், நாடக தடைச்சட்ட 'முஸ்தீபும்' நன்றாகக் காட்டிவிட்டன.

ராதாவின் ராமாயணம் தங்கள் மனதைப் புண்படுத்துவதாகக் கூறிக் கொதித்தெழுந்தவர்கள், அந்நாடகத்தில் காட்டப்படும் காட்சிகளுக்கு ஆதாரங்கள் கேட்டாலும் தருவதாக தோழர் ராதா பகிரங்கமாகக் கூறியிருப்பதைக் கவனிக்கவில்லை.

வீணை பகையும், குரோதமும் வளருவது, சமூகத்துக்கு நன்மை பயப்பதல்ல என்ற நன்னோக்கம் இருந்திருக்குமானால், தோழர் ராதாவைத் தனியே சந்தித்து, விளக்கம் கேட்டிருக்கலாம், திருத்தம் கூறியிருக்

கலாம், ஆதாரங்களைக் கொட்டிக் காட்டியிருக்கலாம். இந்த முறை, பொது மக்களிடம் பணியாற்றும் புனிதத்தன்மைக்குக் காப்பளித்திருக்கும். ஆனால் நடைபெற்றது, அமளி! சட்டம் குறுக்கிட்டுவிட்டது—தடை உத்திரவு பிறந்தது—எவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கை தனக்கு இருக்கிறது என்பதைக் காட்டிக்கொள்ளும் வாய்ப்பு தோழர் ராதாவுக்கு ஏற்பட்டது—தடையை மீறப்போவதாக அறிவித்தார்—சிறையில் கொண்டு போய்ச் சேர்த்தனர் சர்க்கார்!

திராவிட கழகம் திட்டம் ஏதும் தீட்டா முன்பு, பெரியார் வெளி நாடு சென்றிருக்கும் தருணத்தில், கிளர்ச்சி எழுவதைத் தாம் விரும்பவில்லை, என்று நடிகவேள் ராதா, மனதாரக் கருதுகிறார், எனினும், தன்மானத்தை அழிக்கும் வகையில், தடை! தடை! தடை! என்று, எந்தத் திக்கிலிருந்தும் சட்டம் முழக்கமிடும்போது, கொள்கையில் உறுதி கொண்டிருப்பதைக் காட்ட, தடையை மீறுவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை, என்பதை விளக்கி விட்டே, சிறை சென்றிருக்கிறார்.

இந்நிலையில், முதலமைச்சர் காமராஜர், செய்யக்கூடியது என்ன இருக்கிறது, என்று சிலர் கேட்கின்றனர்.

ஏன் இல்லை! முதலாவதாக முதலமைச்சர், பொதுமக்களிடம் எழும்பியுள்ள இந்தப் பிரச்சினைபற்றி, தமது கருத்து யாது, என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிப்பதன் மூலம், நிலைமையைத் தெளிவுபடுத்த முடியும்—தெளிவுபடுத்தவேண்டும்.

காமராஜர் ஆட்சிக்குத் தொல்லை தரமாட்டோம் — என்று வெளிப்படையாகவே கூறும், கழகத்தவர், ராதா.

மற்ற மற்ற முதலமைச்சர்கள் போல் மக்களிடமிருந்து நெடுந்தூரம் விலகி நிற்பவரல்ல, காமராஜர். எனவே, அவருக்கு, நடிகவேள் ராதாவையோ, அவரை எதிர்த்துக் கிளர்ச்சிகளை மூட்டி வருவோரையோ, அழைத்துப் பேச இயலாது என்று, கூறிவிடுவதற்கில்லை.

சந்தித்துப் பேசுபவர்கள் மனதிலே, நம்பிக்கையும் மகிழ்ச்சியும் கூட ஏற்படும்படி நடந்து கொள்ளும் திறமை அவரிடம் நிரம்ப இருக்கிறது என்பது, நாடக தடை மசோதா சம்பந்தமாக, தென்னிந்திய நடிகர் சங்கத்தவர் அவரைச் சந்தித்த போது, நன்றாக விளங்கி இருக்கிறது. எனவே, முதலமைச்சர், முனைந்தால் இந்தப் பிரச்சினையில், தெளிவு நிச்சயம் பிறக்கும் என்று நம்புகிறோம்.

நாடகத் தடை மசோதா போன்ற பிரச்சினைகளில், கல்வி மந்திரியாகவும் ஆச்சாரியாரின் நிழலாகவும் இருந்து வரும் கனம். சுப்ரமணியம் அவர்களுக்கு மட்டுமே அவசர ஆர்வமும், அளவு கடந்த அக்கரையும் இருப்பதாக, நாடே பேசுகிறது!

ஒரு மந்திரி சபையில் உள்ள ஒரு மந்திரி மீது மட்டும் கொதிப்பும் வெறுப்பும் இருக்கும் நிலைமை, அடிக்கடி காணக் கூடியதல்ல. நாடக தடை மசோதா கண்டன ஊர்வலத்தில், மந்திரி சபை ஒழிக என்றோ, காமராஜர் ஆட்சி வீழ்க என்றோ, முழக்கம்இல்லை —மந்திரி சுப்ரமணியத்தைக் கண்டித்து மட்டும் முழக்கம் இருந்தது. இந்த நிலை, விசித்திரமானது என்பது மட்டுமல்ல, வீணை இதனை வளர விடுகிறார்கள் என்றே நாம் எண்ண வேண்டி இருக்கிறது.

கோடீஸ்வரர்களின் கோட்டமான கோவை மாவட்டத்தைத் திருப்திப் படுத்தவோ, வெளியிலிருந்தால் விஷமத்தனங்களுக்கு விளை நிலம் ஏற்பட்டு விடும் என்ற அச்சத்தாலோ, இளைஞர், வழக்கறிஞர், எதிர்க் கட்சிகளைத் துச்சமாக மதிப்பவர், என்பதற்காகவோ, எதன் பொருட்டோ, ஆச்சாரியாரின் அந்தரங்க நண்பராகவும், அவருடைய சகல கோட்பாடுகளுக்கும் ஆதரவாளராகவும் இருந்து வந்த கனம். சுப்ரமணியம், காமராஜர் மந்திரி சபையில் இடம் பெற்றிருக்கிறார்!

இடம் பெற்றாரா — தரப்பட்டதா — இடம் பிடித்துக் கொண்டாரா — என்றெல்லாம் கூட மக்கள் பேசிக் கொள்கின்றனர்—முதலமைச்சர் ஆகி விட்ட போதிலும், காமராஜரின் செவியில் மக்களின் குரல் தெளிவாகக் கேட்கிறது, என்றே நம்புகிறோம்.

இந்நிலையில், கனம். சுப்ரமணியம் மந்திரிசபையில் இடம் பெற்றிருப்பானேன்!!

திராவிடப் பெருங்குடி மக்களின் பாதுகாப்புப் பாசறைகளாக உள்ள கழகங்கள், விளக்கமறியாதாரும், விஷமிகளும், எத்துணை ஏசலும் ஏளனமும் செய்யினும், காமராஜர் ஆட்சிக்கு எதிர்ப்பு செய்யாமலிருக்கும் போக்கை, கனம். சுப்ரமணியனாரின் நோக்கும் போக்கும் குலைத்து விடும் என்று நாம் அஞ்சுகிறோம்.

கல்வியில் கைவைத்தார், கவிழ்ந்தார், கருப்புக் கண்ணாடியார்!

கலையில் கை வைக்கிறார் காமராஜர்.........! என்று நாடு, பேசுகிறது!! இது நல்லதல்ல, என்று மட்டும் முதலமைச்சருக்குக் கூறிக் கொள்கிறோம்.

தோழர் ராதாவை விடுதலை செய்வதுடன், நாட்டிலே கிளம்பியுள்ள இந்தக் குழப்பத்தைப் போக்க, துணிந்து, முதலமைச்சர், தமக்கு இன்று கிடைத்துள்ள நல்ல சூழ்நிலையைப் பயன் படுத்தி, வெற்றிகாண வேண்டுமென்று விரும்புகிறோம்.

★


இந்தியா லைப் அண்டு ஜெனரல் அஷ்யூரன்ஸ் சொஸைடி, லிமிடெட்

தலைமை ஆபீஸ்: கோயமுத்தூர்

31—12—1953 முடிய பாலிசி ரூ. 1000-க்கு வருஷம் 1-க்கு போனஸ்

ரூ. 20 முழு ஜீவிய பாலிசிக்கு
என்டௌமெண்டு பாலிசிக்கு ரூ. 15

அதிகப்படியான போனஸ் அளிப்பதே கம்பெனியின்
தொடர்ந்த அபிவிருத்திக்கு அத்தாட்சி

முக்கிய அம்சங்கள்:
குறைந்த சந்தா விகிதம், உரிமை சீக்கிரம் கொடுப்பது
தமிழ் நாடு முழுதும் பாங்கு ஏஜன்சி வசதிகள்

பிரதிநிதித்துவத்திற்கு,
பாலிசி எடுப்பதற்கு, தக்க நிலையம்.

M. S. பழனியப்ப முதலியார் B. A., சேர்மேன் & Mg. டைரெக்டர்.
C. R. சிவசுப்ரமண்யம் B. A. டைரெக்டர் & காரியதரிசி

# 'சிதம்பரம்' சேட்ஜியிடம்!

விசேஷ பூஜைகள் எதற்கும் குறைச்சலில்லை — சூடதீப ஆராதனையும் நடைபெறத் தவறவில்லை — இயந்திரத்தைப்பிடித்து ஆரம்பித்து வைத்த அன்பரோ, ஐயனையும் மெய்யனையும் வேண்டிக்கொள்ளத் தயங்கவில்லை — புரோகிதர்களும் மந்திரங்களை உச்சரிக்கத் தவறவில்லை — பூமாலை சூட்டப்பட்டது! பிராமணோத்தமர் தான் 'தெப்போட்டம்' செய்தார்! ஆண்டவனின் அனுக்கிரகம் வழிகாட்டுமென்று, மனதார ஆசிர்வதித்தார் — இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் மட்டுமல்ல இன்னும் சில ஆண்டுகளில் எங்கள் சிதம்பரத்தின் பெயர், அகில உலகமெங்கும் பரவும் என்றனர், கம்பெனியார்.

அதனைக் குறிப்பிட்டு, சென்னை ஏடுகள் ஆலோலம் பாடின.

சிதம்பரத்தை முடுக்கிவிடுவதற்காக, கவர்னர் ஜனரலாக இருந்த ஆச்சாரியாரே, எழுந்தருளினார். ஆச்சார நேமநிஷ்டைகள் எதற்கும் குறைவில்லை — ஆண்டவன் திருநாமங்களை உச்சரித்த பிறகே வேலை ஆரம்பமாயிற்று.

*

சிதம்பரம், அதோ!

தண்ணீரில், அசைந்தாடும், காட்சி ஆனந்தம்! பரமானந்தம்!

அது ஏந்தியிருக்கும் மூவர்ணக் கொடி — எங்கள் வெற்றியின் சின்னம்.

வீரர். வ. உ. சிதம்பரனாரின், லட்சியத்தைப் பூர்த்தி செய்துவிட்டோம்.

வெள்ளையனுக்குப் போட்டியாக இந்திய உபகண்டத்திலேயே முதல் முதல் 'கப்பலோட்டிய தமிழன்' அல்லவா, அவர்.

அவர் பெயரால் கப்பல் விடுகிறோம்!

வ. உ. சி. தேசியத் தியாகிகளின் சிகரம் — அவர் திரு நாமத்தால், ஒரு கப்பல் — செய்வது யார்—நாங்கள்! எங்கள் சர்க்காரின் உதவியால்! அலைகடலிலே, "சிதம்பரம்" செல்லும்போது, தமிழ் நாட்டிலே இருக்கிற ஒவ்வொரு தமிழ் மகனும் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டும்.

கப்பல், செல்லுகிறது! தேசிய வீரரின் பெயரை ஏந்திய கப்பல்!

தமிழன், முன்னாளில், புலி வில் கயல் பொறித்த கொடியுடன் நாவாய் செலுத்தினானும் நானிலமெங்கும்.

இதோ, நாங்களும் கப்பல்விடுகிறோம்—அந்தப் பழைய காலத்தை சிருஷ்டிக்க முயன்ற ஒரு தேசாபிமானியின் கப்பலை.

ஜகம் புகழும், எம்மை.

இன்று ஜலத்திலே, வியாபாரக் கப்பலாகச் செல்லும், 'சிதம்பரம்' விரைவில் பல கப்பல்களுக்குத் தலைமையாக விளங்கும்.

*

இப்படியெல்லாம் பேசப்பட்டது. தூத்துக்குடியிலுள்ள சில காங்கிரஸ் தோழர்களும், நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த பணக்காரர்கள் பலருமாகச் சேர்ந்து ஒரு கம்பெனியை ஆரம்பித்து அதன் சார்பில் தமது முதல் கப்பலை மிதக்க விட்டனர்!! அதற்கு, செயல் வீரர் வ. உ. சி அவர்களின் பெயரையும் இட்டனர்!! அந்தக் கப்பலோட்டத்துக்கு அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த ஆச்சாரியார், டில்லியிலிருந்து வந்தார் — தேவ தேவனுக்கு ஆராதனை தீபவைபவங்களுடன் தான். கம்பெனி ஆரம்பமாயிற்று!!

ஆனால், அந்தச் 'சிதம்பரம்' இப்போது, தூத்துக்குடி துறைமுகத்திலே இல்லையாம்—சென்னை சட்டசபையில் அமைச்சரொருவர் அறிவிக்கிறார்.

சிதம்பரனாரின் பெயரில் கப்பல் துவக்கப்படப் போகிறதென்றதும், சர்க்கரின் சார்பில் சுமார் 5½ லட்சம் ரூபாய் கடனாக அளிக்கப்பட்டது! அளித்தது டில்லி சர்க்காரல்ல!! செக்கிழுத்த சிதம்பரனார் என்றால், உங்களுக்கும் நமக்கும் தானே தெரியும் — டில்லிக்கு வேறு யாராவது வடக்கத்தி ஆசாமியாயிருந்தால் வாத்சல்யம் பிறந்திருக்கும்! வ. உ. சி. தென்னாட்டு ஆளாச்சே!! அப்பேற்பட்டவரின் பெயரால், ஆரம்பிக்கபபடும் கம்பெனியைப்பற்றி, அதற்கென்ன கவலை? அதனால் ரூ. 5½ லட்சத்தையும் கம்பெனிக்கு கொடுத்து உதவியது, சென்னை சர்க்கார்! கம்பெனி, விடப்போகும் கப்பலோ, சிதம்பரனார் திருநாமம் கொள்ளப் போகிறது—கம்பெனியின் பெயரோ, வெறும் கப்பல் போக்குவரத்து கம்பெனி அல்ல! சுதேசி ஸ்டீம்ஷிப் கம்பெனி!! சொந்தக்காரர்களோ, பெரிய காங்கிரஸ்காரர்கள்!!! மக்களின் வரிப்பணத்திலிருந்து ரூ. 5½ லட்சம், போட்டு, 'சிதம்பரம்' மிதக்க விடப்பட்டது.

*

அந்த 'சிதம்பரம்' எங்கே? தூத்துக்குடியில் இல்லை! நீரில் மூழ்கிடவுமில்லை!!

பம்பாய்க்குப் போயிருக்கிறது!— வியாபார சம்பந்தமாகவா?—ஆமாம், வியாபார சம்பந்தமாகத்தான். வேறு யாருடைய சரக்கையும் விற்று பம்பாய் மார்க்கெட்டின் பணத்தைக் கொண்டுவர, அல்ல! அரிச்சந்திரன் மனைவியை வீதியிலே ஏலம் கூறிச் சென்றபின் சுடலை சென்று தன்னையும் அடிமை கொள்வாருண்டோ, என்று அலறினானுமே, அதுபோல, தன்னையே விற்பனை செய்து கொள்ள!!

பம்பாயில், சிதம்பரம்! பைந்தமிழிடமல்ல; சேட்டிடம்!!

சுதேசியர், சிதம்பரத்தை விற்றுவிட்டார்களாம்.

சிதம்பரத்தை வைத்திருக்க முடியவில்லையாம்.

சர்க்காரிடம் பட்ட கடனையும், 'சுதேசியாரால்' தீர்க்க முடியவில்லையாம்!!

இதனால் "சுதேசி" வசம் கிடக்கும் மக்களின் வரிப் பணம், வரவு வந்ததுபோக மிச்சம் ரூபாய் 4½ லட்சம் வரவேண்டுமாம்!!

சிதம்பரத்தை விற்றதால் கிடைக்கும் 1½ லட்சம் போக 'சுதேசி'யிடமிருந்து ரூபாய் ரூ. 3 லட்சம், சென்னை கஜானாவுக்குச் சேரவேண்டுமாம்; சட்டசபையில் செப்பியிருக்கிறார், அமைச்சர்! மறந்திடவேண்டாம், இந்தக் கம்பெனியின் உரிமையாளர்கள், பெரிய தேசிய வீரர்கள்.

*

சிதம்பரம், பம்பாயில் விலை கூறப்படுகிறார்!

வேறு வழியில்லை, சுதேசி கம்பெனிக்கு!!

நாகையும், தரங்கமும், காரையும், புதுவையும், கடலூரும், எண்ணூரும், மங்களூரும், விசாகையும், ஏராளம் உண்டு, இங்கே. இந்தத் துறைமுகங்கள் எதிலும், சிதம்பரம்

இருக்க வழியில்லை. சேட்டின் பொருளாகப் பம்பாய்செல்லுகிறது.

இதுபோல, எத்தனையோ கம்பெனிகள், நம்மவரால் துவக்கப்பட்டுக் கடைசியில், வடவரை நோக்கிச்சரணாகதி அடைகின்றன. அவர்களது தயவை நாடிப்பிழைக்க வேண்டிய நிலையில் உள்ளன. அந்தக் கதிக்கு, சிதம்பரமும் ஆளாகி விட்டது.

தீரர், வ. உ. சிதம்பரம். வீரர் அவர். இவரைப்போலொரு ஆளை வடநாட்டில் காட்டவும் இயலாது. அவருடைய ஞாபகார்த்தமாகச் செய்யப்பட்ட காரியம், இந்தக் கப்பல் ஒன்றுதான்.

இதனை, ஆரம்ப விழாவின்போது குறிப்பிடாதவர்கள் இல்லை—"சோப்பும் சீப்பும் கொண்டுவந்த வெள்ளையன்,பிறருகடலாதிக்கம்பெறநினைத்தான். அவனுடன் போட்டியிட்ட ஒரே ஆள்-எங்கள் வ. உ. சி" என்று பெருமைபேசாதோர் கிடையாது.

அந்தச்சிதம்பரம், சுதேசியாரால், விற்கப்படுகிறார்! பம்பாய்க்கு!

'சிதம்பரங்களை', வைத்து நடத்த முடியவில்லை,சுதேசியால். காரணம், போதிய மூலதனத்துக்கே சர்க்கார் காலில் விழ வேண்டியிருக்கிறது. அதனால், பிற கப்பல் கம்பெனிகளுடன் போட்டி போட இயலாது கம்பெனி கவிழ்கிறது! கப்பல், விலை கூறப்படுகிறது!! இது, இங்குள்ள நிலை—அதோ, நமது சிதம்பரம் நங்கூரம் பாய்ச்சப்பட்டிருக்கும் பம்பாயின் கரையிலே இருந்தபடி, இந்த அகண்ட பாரதம் முழுவதையும் பார்க்கிறார், பிர்லா! அவர், டில்லி சர்க்காரைப் பார்த்துக் கேட்கிறார், "சர்க்காரே! என்னைப் போன்ற முதலாளிகளை, இந்நாடு முழுமையும் ஆலைகளையும் கம்பெனிகளையும் நடத்த அனுமதி கொடுத்தால், கூடிய சிக்கிரம் இந்தியாவைப் பொன் விளையும் பூமியாக்குகிறோம். என்ன, செய்கிறாயா?", என்று—அதட்டியே, கேட்கிறார். நீங்கள் சம்மதிக்காவிட்டால், இலங்கைக்கு என்மூலதனத்தைக் கொண்டு போய் அங்கே கம்பெனிகளையும் ஆலைகளையும் ஆரம்பிக்கப் போகிறேன் — என்கிறார். பிர்லா, பேசுவது இது! அவருக்கு இந்தப் பரதகண்டமே,போதவில்லை —பாரிலே, எங்கெங்கு இடம் கிடைக்கும் என்று தேடுகிறார்.

நாமோ, 'சிதம்பரத்தை' விற்றுவிட்டு, தேசியத் தெம்மாங்கு பாடிக் கொண்டிருக்கிறோம்! செக்கிழுத்த சிதம்பரனாருக்காக சிறு நினைவுச் சின்னம் கூட நிறுவமுடியாமல் தவிக்கிறோம் — ஆனால், அண்மையில் மறைந்த ரவிஅகமதுகிந்வாய்க்கு பண்டிதரின் முயற்சியின் பேரில், ஒரு பெரிய நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது— வடக்கே! தெற்கேயோ, இருக்கின்றதும் 'ஏலம்' போகிறது, ஏலம்!!

★


மதுரை மாவட்ட

# திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது மாநாடு

## 1955 ஜனவரி 8, 9 சனி, ஞாயிறு தேதிகளில்

மதுரை ஆரப்பாளையம் ஞானஒளிவுபுரம்

சௌந்தரபாண்டியனார் பந்தலில் நடைபெறும்

| சனி 8—1—55 | ஞாயிறு 9—1—55 |
| --- | --- |
| சமூக சீர்திருத்த மாநாடு | அரசியல் மாநாடு |
| தலைவர் | தலைவர் |
| **சத்தியவாணிமுத்து** | **மு. கருணாநிதி** |
| திறப்பாளர் | திறப்பாளர் |
| **தில்லை-வில்லாளன்** | **எம். பி. சுப்பிரமணியம்** |

இரண்டு நாட்களிலும் அண்ணா அவர்களும்
இயக்க முன்னணி வீரர்களனைவரும் கலந்துகொள்வர்

இரு நாட்களிலும் இசை-முரசு நாகூர் அனிபா, இசைச் செல்வி பி. எஸ். செல்வா குழுவினர் இசை விருந்து வழங்குவர்

இரு நாட்களிலும் நடிப்புச் செல்வர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர் நடிக்கும் புதிய நாடகங்களுண்டு.

மாநாட்டுக் கட்டணம் (இரு நாட்களுக்கும் நாடகங்களுட்பட)
வரவேற்பாளர் ரூ 5, பிரதிநிதி ரூ 2, பார்வையாளர் ரூ 1, பெண்கள் அணா 8.

வ. கு. தலைவர், பொருளாளர். எஸ். வி. தொந்தி

தொண்டர்படைத் தலைவர் எஸ். எஸ். இராசேந்திரன், பி. கே. சேதுராமன், மு. வேலு.

செயலாளர்கள் எஸ். முத்து, எம். அய்யாசாமி

# மிருக தர்பார்

[கென்யா மக்களின் விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டு, பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தினால் கடுமையான தண்டனை தரப்பட்டு, சிறையில் அடைபட்டிருக்கிறார். ஜோமோ கெனியாடா.

வெள்ளையர் ஆப்பிரிக்கக் கருப்பரை அழித்தொழிக்கும் அக்ரமத்தை எதிர்த்து, கென்யா நாட்டுக்கு விடுதலை தேவை என்று போராடிய இந்தப் புரட்சி வீரர், விடுதலைப் பிரச்சினை குறித்து எவ்வளவு அழகாக விளக்கக் கூடியவர் என்பது, இந்தக் கட்டுரை மூலம் விளக்கமாகும்.

வெள்ளையரை வெட்டுவது, கொள்ளை அடிப்பது போன்ற பயங்கர, பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டிருக்கும் மாவ் மாவ் இயக்கத்தை, கெனியாடா தான் நடத்தி வருகிறார், என்று வெள்ளை ஏகாதிபத்யம் குற்றம் சாட்டிற்று.

அடக்கு முறையினால் ஆத்திரம் கொண்ட மக்களில் சிலர் இது போலச் செய்து வருகிறார்கள்—அவர்களைத் தூண்டிவிடுபவன் நான் அல்ல, என்று கெனியாடா வாதாடினார். ஏகாதிபத்யம் இதை ஏற்றுக் கொள்ளவில்லை—கெனியாடாவைச் சிறையிலே தள்ளிவிட்டது.

கெனியா மக்களிடை, விடுதலை உணர்ச்சி கொழுந்து விட்டெறியத் தக்க விதமான வீரப்பணியாற்றிய கெனியாடாவின் கருத்துரை, இக் கட்டுரை.]

ஒரு காலத்தில் ஒரு யானை ஒரு மனிதனுடன் நட்புக் கொண்டது இப்படி இருக்கும் போது ஒரு நாள் கடுமையான புயல் வீசத்தொடங்கியது யானை வசித்து வந்த காட்டின் எல்லையிலேயே அம்மனிதன் தனது குடிசையை அமைத்திருந்தான். யானை மனிதனிடம் சென்று என் அருமை நண்பரே, இந்தக் கடும்புயலில் இருந்து எனது துதிக்கையை மாத்திரம் காப்பாற்றிக் கொள்ள உமது குடிசையில் கொஞ்சம் இடம் தாரும் என்று இரங்கிக் கேட்டது.

மனிதன் யானையின் அந்நிலையைக் கண்டு மனமிரங்கினான். பிறகு தனது குடிசையின் அளவைச் சுற்றி நோக்கிவிட்டு எனதாருயிர் நண்பரான யானையாரே எனது குடிசையோ ரொம்பச் சிறிது; அதிலே இடம் இருப்பது அரிது. இருந்தாலும் உமது துதிக்கைக்கு மட்டுமே இடம் உண்டு. ஆகையால் தயவு செய்து துதிக்கையை மெதுவாக உள்ளேவிடும் என்றார்.

யானை மனிதனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக நண்பரே இவ்வுதவியை என்றும் நான் மறக்கப் போவதில்லை. என்றாவது ஒரு நாள் இதைப்போல உமக்கும் உதவி செய்வேன்" என்றது.

பின் என்ன நடந்தது! யானை தனது துதிக்கையை மட்டும் நுழைத்ததோடு நிற்கவில்லை; தனது தலை உடம்பு எல்லாவற்றையும் உள்ளே புகுத்தி விட்டது. கடைசியாக மனிதன் குடிசைக்கு வெளியே நிற்க வேண்டி நேரிட்டது. யானையோ குடிசையினுள் நல்ல குசாலாக, சொகுசாக அமர்ந்து கொண்டது. பிறகு மனிதனைப் பார்த்து "என் அருமை நண்பரே உமது தோல் எனது தோலைவிட உறுதி வாய்ந்தது இந்தக் குடிசையோ நம்மிருவருக்கும் போதாது உமதுதோல் உரமுடையதானபடியால் நீர் வெளியே நிற்பதில் எவ்விதமான ஆபத்தும் உமக்கு ஏற்படப் போவதில்லை. ஆனால் நான் வெளியே நிற்பேனானால் கட்டாயமாக எனதுதோலுக்கு ஆபத்துதான்" என்றது.

நண்பனின் நன்றிகெட்டசெய்கையைக் கண்ட மனிதன் மனமுடைந்து முணுமுணுக்கத் தொடங்கினான். இந்த முணுமுணுப்பைக் கேட்ட காட்டிலுள்ள மிருகங்கள் "என்ன சங்கதி" என்று அறியவந்தன. எல்லாம் வந்து யானைக்கும் மனிதனுக்கும் நடக்கும் காரசாரமான விவாதத்தைக் கேட்டுக்கொண்டு நின்றன. இந்தச் சங்கடமான நிலையில் சிவபூஜையில் கரடி நுழைவதுபோல் சிங்கம் பெரிய அதிகாரத்துடன் வந்து தனது அண்டம் அதிரும் குரலில் "ஏ நான் காட்டுக்கு அரசன் என்று இன்னும் உங்களுக்குத் தெரியாதா? யார் என் நாட்டின் சமாதானத்துக்குப் பங்கம் விளைவிப்பவன்" என்று கேட்டது.

காட்டு அரசாங்க சபையில் ஒரு மந்திரி பதவியை வகிக்கும் யானையவர்கள் இதைக் கேட்டு "எனது மதிப்பிற்குரியவரே, உங்கள் இராச்சியத்தில் எவரும் குழப்பம் விளைவிக்கவில்லை இப்போது நான் இருந்துவரும் குடிசைக்கு உரியவரும், எனது நண்பருமான இம்மனிதரிடம் இக்குடிசையைப் பற்றிப் பேசுகிறோமே தவிர வேறொன்றும் இல்லை" என்று தாழ்மையுடன் சொல்லிற்று.

சமாதானமும் அமைதியும் நிலவ வேண்டும் என எண்ணுபவைகளில் சிங்கமும் ஒன்று. அது தனது அதிகாரக்குரலில், "இதைப்பற்றி விசாரணை நடத்த ஒரு கமிஷன் நியமிக்கும்படி எனது மந்திரிக்குக் கட்டளையிடுகிறேன்" என்றது.

பிறகு மனிதனைப் பார்த்து "நீ எனது பிரஜைகளிடம் சிநேகம் செய்தவன் மூலம் நன்மை தேடிக் கொள்கிறாய். அதிலும் மிக முக்கியமானது என்னவென்றால் எனது அரசாங்கத்தில் மதிக்கத் தக்க மந்திரிப் பதவி வகிக்கும் யானையாரிடம் சிநேகம் வைத்திருப்பது தான், ஆதலால் இனிமேல் எவ்வித முணுமுப்பும் வேண்டாம். உன்னுடையது உனக்குக் கிடைக்காமல் போகாது எமது விசாரணை சபை கூடும்வரை பொறுத்திரு அதில் எனது அபிப்பிராயத்தை வெளியிட நிறைய சந்தர்ப்பம் தரப்படும் ஆகையால் இந்த விசாரணை சபை நியமிப்பதற்கு நீ மகிழ்ச்சி அடைவாய் என்று நம்புகிறேன்" என்றது.

காட்டரசனான சிங்கத்தின் சீனி போன்ற பேச்சில் மனிதன் மயங்கி விட்டான். தனக்குக் குடிசை திரும்பக்கிடைக்கும் என்று நம்பிக் கொண்டு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த யானை தனது தலைவனின்

கட்டளைக் கிணங்க மற்ற மந்திரிமார்களுடன் சேர்ந்து விசாரணை சபை நியமிக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தது. இந்த விசாரணை சபையில் திருவாளர் காண்டாமிருகம், திரு எருமை, திரு முதலை அங்கத்தினராகவும், மேன்மை தங்கிய நரியவர்கள் தலைவராகவும், திருவாளர்கள் சிறுத்தையவர்களை செயலாளராகவும் நியமித்தனர்.

இவைகளைப் பார்த்த மனிதன் தனது சார்பில் ஒருவரும் நியமிக்கபடாததுகண்டு சஞ்சலப்பட்டான், அதற்கு "அவர்கள்" "காட்டுச் சட்டங்களைக் கற்றறிந்தவர்கள் எவரும் அவன் சார்பில் கலந்து கொள்ள மறுத்துவிட்டனர்" என்றுசொல்லி "விட்டார்கள்"

இன்னும் சொல்லவேண்டுமானால் அந்த விசாரணை சபையில் அங்கத்துவம் வகிக்கும் அனைவரும் ஒழுக்கத்திலும் நீதியிலும் நடுநிலைமை வகிப்பதிலும் தவறுதவர்கள் போலும்! ஆகையால் அவர்கள் உயர்ந்த இந்த மிருகவர்க்கத்தைக் கண்ணும் கருத்துமாகக் கவனிக்க கடவுளால் நீண்ட நகங்களும், கோரப் பற்களும் அருளப்பட்டவர்களாக இருக்கிறபடியால் தனது பிரச்னையை நடுநிலைமையிலிருந்து தீர்த்துவைப்பார்கள் என்று மனிதன் நம்பினான்.

விசாரணை சபை தனது வேலையைத் தொடங்கியது; கனம் யானையவர்களையே முதலாவதாக விசாரணைக்கு அழைத்தது யானையவர்கள் தனது மனைவியின் ஆடம்பர அலங்காரங்களுடன் வந்து அதிகாரம் தொனிக்கும் குரலில் "காட்டுக்கனவான்களே அநேகமாக உங்கள் எல்லோருக்கும் இந்தக் கதை தெரியுமென்று நம்புகிறேன். ஆதலால் மீண்டும் அதைப்பற்றிச் சொல்லி உங்களின் பொன்னான நேரத்தை மண்ணாக்க விரும்பவில்லை. நான் எப்பொழுதும் எனது நண்பரின் நன்மையைக் கருதியே வாழ்பவன், ஏதோ அசந்தர்ப்பவசமாக இங்கே நிற்கும் எனது நண்பருக்கும் எனக்கும் அபிப்பிராய வேற்றுமை உண்டாகி விட்டது"

"அவரே என்னை கடும்புயலில் இருந்து தனது குடிசையைக் காப்பாற்றும்படி வேண்டினார். ஒருவருமில்லாத அக் குடிசையைப் புயல் வளைத்துக் கொண்டது. அந்தச் சமயத்தில் எனது நண்பரின் நன்மையைக் கருதியும் அந்த அவலட்சணக் குடிசையை அபிவிருத்தி செய்யவேண்டும் என்று எண்ணியுந்தான் நான் உள்ளே போய் இருந்து கொண்டேன் இந்த அவசியமான சமயத்தில் நான் செய்தது தவிர்க்க முடியாத கடமையென ஏற்றுக் கொள்வீர்கள் என்பதில் சந்தேகமில்லை" என்று கூறி தனது பேச்சை முடித்துக் கொண்டது.

கனம் யானை அவர்கள் முடிவாகக் கொடுத்த சாட்சியத்தைக் கேட்ட திருவாளர் வரிக்குதிரையும் இன்னும் அதைப்போல வயதுமுதிர்ந்தவர்களும் யானை அவர்கள் சொன்னவைகளை ஆதரித்தன.

அடுத்தபடியாக அந்தத்தகராறு பற்றிய தனது அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு அம்மனிதனைக் கூப்பிட்டார்கள். அவன் தனது பேச்சைத் தொடங்கினான்.

ஆனால் விசாரணை சபையினர் இடையில் நிறுத்திச் சொல்லிவிட்டனர். "எமது அருமை மனிதரே, தயவுசெய்து உமது பேச்சை நிறுத்திக் கொள்ளும். நாங்கள் பாரபட்சமின்றி எல்லாவற்றையும் அறிந்து கொண்டோம், இப்போது நாம் விரும்புவது என்னவென்றால் உன் குடிசையில், அலங்கோலமாகக் கிடந்த இடத்தில் திரு யானையவர்கள் வருவதற்கு முன்னால் வேறு யாராவது வந்து இருந்தார்களா? இல்லையா? எங்களுக்குத்தெரிவிக்கவும்." என்றனர்.

மனிதன் "இல்லை, ஆனால்......" என்று தனது வாக்கியத்தை முடிப்பதற்குள், விசாரணை சபையினர் தாங்கள் இரு சார்பினரையும் விசாரித்து விபரங்களெல்லாவற்றையும் நன்றாகத் தெரிந்து கொண்டதாகச் சொல்லி இது பற்றி தங்களுடைய தீர்ப்பை அளிக்க விடும்படி சொன்னார்கள்.

இதன் பின் இவர்களுக்கு யானையவர்களின் செலவில் ஒரு விருந்து பசாரம் நடந்தது அதற்குப் பிறகு எல்லோரும் தீர்ப்புக் கூற வந்தனர். மனிதனைக் கூப்பிட்டுக் கீழ்க்கண்டவாறு தங்களின் தீர்ப்பை அறிவித்தனர்.

"இந்தத் தகராறும் தப்பபிப்பிராயமும் உனது பிற்போக்கான எண்ணத்தினால் உண்டானவை என்பது எங்களின் கருத்து.

"ஆகையால் எங்கள் தீர்மானம் என்னவெனில் உனது நன்மைக்காக உன்து உரிமையை திருயானையவர்கள் கடமையைச் செய்து காப்பாற்றினர். அதனால் அந்த இடம் புதிய ஆளுக்கு மாற வேண்டும். அதுவே உனக்கு நன்மை அளிக்கும், நீ இன்னும் வளர்ச்சியடையாமல் இருக்கிறபடியால் அந்த இடத்தை உன்னால் கவனித்துக் கொள்ள முடியாது. ஆகவே நாங்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். இன்று முதல் யானையவர்கள் அந்தக் குடிசையிலேயே இருக்கட்டும், நீ உனக்குப் பிடித்தமான இடத்தைத் தேடி அங்கேயே குடிசையை அமைத்துக்கொண்டு சுகமாக வாழ அனுமதி தருகிறோம். பிறகு அடிக்கடி நீ நன்றாக இருக்கிறாயா? என்பதை நாங்கள் கவனித்துக்கொள்வோம்" என்றனர்.

★


## ஏஜண்டுத் தோழர்களுக்கு

★★★★★★★

ஏஜண்டுத் தோழர்கள் பலர் இன்னும் பொங்கல் மலருக்குரிய தொகையை முன்பணமாக அனுப்பாமல் இருப்பதோடு, தங்களுக்குத் தேவையான மலரின் எண்ணிக்கை விபரத்தையும் அறிவிக்காமல் இருக்கிறார்கள். எனவே, முன்பணம் முழுவதும் அனுப்பிய ஏஜண்டுகளுக்குத்தான் மலர் அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்
திராவிடநாடு

# தமிழரும் மலாய் நாடும்

[ பேராசிரியர் டாக்டர் மகமது நயினார் கருத்துரை ]

[சென்னை பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகத் திகழும் டாக்டர் மகமது உசேன் நயனுர் மலாய் நாடு சென்று ஆராய்ச்சிச் சொற்பொழிவாற்றுகையில் வெளியிட்ட கருத்துரை சுவைமிக்கது. அக்கருத்துரையின் சுருக்கம் இங்கு தரப்பட்டிருக்கிறது.]

நில இயலாகவும், மொழி இயலாகவும் உறுதிப்படுத்தக் கூடிய வகையில் தென்னிந்தியாவானது ஆஸ்திரேலியாவரை தொடர்பான, ஒரே நிலப்பரப்பாக இருந்திருக்கவேண்டும். தென்னிந்தியர்களின் ஒரே மொழி பேசப்பட்டிருக்கவேண்டும். எனவே தென்னிந்தியா தான் மனித குலத்தின் முதல் வீடு.

இந்தோனேஷிய மொழியில் தமிழ் மொழியின் ஊடுருவல் நிறைய இருந்திருக்கிறது. தமிழர் இங்கு வாணிப வளத்துடன் வந்த போது பரப்பிய கலையுடன் சொற்களும் விரவின.

'பகி' என்ற மலாய்ச் சொல்லும் 'பகல்' என்ற தமிழ்ச் சொல்லும் 'பகு' என்ற வேரிலிருந்து எழுந்தவை. 'பெகி' என்ற மலாய்ச் சொல்லும், 'போகு' என்ற தமிழ்ச் சொல்லும் 'போ' என்ற வேரிலிருந்து உருவானவை.

எண்ணும் முறையிலும் தமிழுக்கும் இந்தோனேஷிய மொழிக்கும் (மலாய்க்கும்) பெரும் உறவு உள்ளது. மலாயில் 'சத்து' என்பதற்கு 'ஒன்று' என்று பொருள். தமிழில் 'ஒத்த' என்று சொல்லுகிறோம். மேலும் ஒன்று முதல் பத்துவரை எண்ணும் முறையை ஒட்டியே, பதினொன்று முதல், பன்னிரண்டு, பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து என்று சொல்லிக் கொண்டே இருபதுவரை கூறுகிறோம்; பிறகும் இருபத்தொன்று, இருபத்திரண்டு என்று எண்ணிச் சொல்லுகிறோம். மலாய் மொழியிலும் இதுபோலத்தான் உள்ளது, எண்ணும் முறை. 'சத்து' முதல் 'சிப்புலு' வரையிலும், பின்சிப் பளாஸ்டுவாபிளாஸ் (பன்னிரண்டு) திகாபிளாஸ் (பதின்மூன்று) என்பது போல எண்ணிச் சென்று, பிறகும், 'டுவாபுலு சத்து, (இருபத்தொன்று) என்று தொடங்கி மலாயில் எண்ணப்படுகிறது.

'இருக்கிறது' என்ற பொருளை உணர்த்தும் மலாய்ச் சொல்லாகிய 'அடா' என்பதற்கும் 'இருக்கிறது' என்பதையே உணர்த்தும் தமிழ்ச் சொல்லாகிய 'அடைவு' என்பதற்கும் உள்ள ஒற்றுமை இன்பம் பயப்பது.

'இத்து' என்பதில் 'இ' எழுத்தும், 'இங்கு' என்ற தமிழில் உள்ள 'இ' எழுத்தும், தமிழ் இலக்கணம் கூறும் சுட்டெழுத்து தானே!

இந்த அளவுக்கு மொழிக்கலப்பு இருக்கவேண்டுமானால் தமிழருக்கும் இந்தோனேஷியப் பகுதியினருக்கும் எந்த அளவு கலாச்சார உறவு ஓங்கியிருக்கவேண்டுமென்பது தெரியும்.

கி. மு. 2-ம் நூற்றாண்டு முதல் கி. பி. 2-ம் நூற்றாண்டுகளில் தமிழர்களின் கடல் கடந்த—உலக முழுதும் பரவிய—வாணிகம் மிக மிகச் செழிப்புற்றிருந்தது. அலெக்ஸாண்டிரியா, அரேபியா, ரஷியா, சீனா முதலிய எங்கும் தமிழர் வாணிகம் பரவியது.

அக்காலத்திய கடல் வழிகள் இரண்டு. ஒன்று பாரசீக வளைகுடா வழி; மற்றொன்று செங்கடல் வழி. பாரசீகர்கள் பலம் மிக்கிருந்தாலும், ரோமானியர்கள் பலம் மிக்கிருந்தாலும் இரு வழிகளிலும் தமிழர்கள் கடல் வாணிபம் புரிந்தனர்.

இக்கால வாணிபத்திற்கு எவ்வாற்றானும் அக்காலத்திய தமிழர் வாணிபத்தின் பருமன், நெடுமை, உயர்வு முதலிய எவையும் இளைத்தவையல்ல.

மயில், கிளி, குரங்கு, யானை முதலிய விலங்கு, பறவைகளைக் கிழக்கிந்தியத்தீவுகட்குத் தமிழர் ஏற்றுமதி செய்தனர். இப்போதைய ஐரோப்பிய மாதருக்கு அன்பான வளர்ப்புப் பிராணியாக நாய் இருப்பதுபோல, அக்கால ரோமானிய அழகிகளுக்கு அன்பான வளர்ப்புப் பிராணியாகும். பெருவிருந்தென்றால் தமிழர்களின் ஏற்றுமதிச் சரக்காகிய கிளிகள் பல கொல்லப்படும்.

தமிழர் தந்த யானைத் தந்தம், மங்கையரின் அங்கத்திற்கு அழகு செய்யும் அணிகளுடன் இழைக்கப்பட்டன.

தமிழர் வாணிபம் தந்த மிளகு அராபியர்களிடையே செல்வருக்கு மட்டும் கிடைக்கும் பொருள். தமிழர் மிளகைத்தான் பின்னர் அராபியர் மேற்கு நாடுகளுக்குத் தந்தனர். இந்நிலையில் அராபியர்களின் வர்த்தகம் பெருகலாயிற்று.

இவ்வண்ணம் வாணிபத்துடன் இந்தோனேஷியப் பகுதிகளில் வந்த தமிழர்கள் வாணிபப் பிடிப்பு தளருங்கால், ஆங்காங்கு தங்கி நிலை பெறலாயினர். தம் சீரிய பழக்க வழக்கங்களைக் கலைப்பண்புகளைப் பரப்பலாயினர்.

7-ம் நூற்றாண்டுக்குப் பிறகு தென்னிந்தியர் வர்த்தகம் அராபியர் கையில் சென்றுவிட்டது. இந்நிலையில் தென்னிந்தியாவிலும் தமிழ் மயமாக்கப்பட்ட சமஸ்கிருதம் (வட.மொழி) தலைதூக்க ஆரம்பித்தது. அராபியச் செல்வாக்கினால் முஸ்லிம் மதம் பரவியது. பின்னர் போர்த்துகீயடச்சு, பிரெஞ்சு, பிரிட்டன் செல்வாக்குகள் ஏற்படலாயின.

தமிழர்கள் கடல் வாணிபத்தில் சிறந்திருந்த பழையநிலை மீண்டும் ஒளிவிடச் செய்யவேண்டும்.

★


## பொங்கல் மலர்

## சந்தாதாரர்கள் கவனத்துக்கு

இவ்வாண்டுப் பொங்கல் மலரின் விலை ரூபா. **1—8—0** ஆகும். முன்பணமாக ரூபா. 1—8—0 அனுப்புகின்ற சந்தாதாரர்களுக்கு மட்டும்தான் மலர் அனுப்பப்படும். மலர் தவறி விடாமல் கிடைக்க வேண்டுமென்று கருதி, ரூபா. 1—15—0 அனுப்புகிறவர்களுக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும்.

பொறுப்பாளர்

வா:- ஆமாம்—மாதாவின் தலையை வெட்டியவனைத்தான்...

[உடனே, அவர்கள் அவனைத் துரத்துகிறார்கள், அடிக்க. அவன், ஓடுகிறான். கூவிக் கொண்டே ஓடுகிறார்கள்]

பெரி:- கேலியா செய்கிறே—எங்களாலேயா முடியாது! காட்டுடா, அந்தப் பாவியை!

வா:- சூரப்புலிகளே! வாங்க... காட்டுகிறேன்

[அவர்கள் துரத்திக்கொண்டே]

பெரி:- காட்டுடா, நரிக்குட்டி

[இடையில் சிலர் சேருகிறார்கள் அனைவரும் ஓடுகிறார்கள் அவன், சிறு சந்துகளில் நுழைந்து ஒரு மாரி கோயில் வாயலில் சென்று நிற்கிறான். அவர்கள் அதைக் கண்டு விட்டு]

அவர்:- டேய்! நீ, உலகத்துக் கோடியிலே ஓடினாலும், விடமாட்டோம் என்று கூவுகிறார்கள்.

[அவன் கோயிலுக்குள் போகிறான். அவர்களும் உள்ளே செல்கிறார்கள் அவன் ஓர் மூலையில் ஒளிந்துகொள்கிறான்]

அவர்:- டேய்! கோயிலுக்குள்ளே புகுந்து கொண்டா, விட்டுவிடுவோமா.........? (என்று கூவுகிறார்கள்)

[அவன் ஒளிந்திருக்குமிடத்தை விட்டு வெளிவராமலேயே பேசுகிறான்]

வா:- கோயிலிலே இருக்கிறோம்—தெரியாதா — இப்பவும் நான் சொல்றேன் — சத்தியமா—சாமி சாட்சியா — இந்த மாரியம்மன் அறியச் சொல்கிறேன். தாயார் தலையை வெட்டினவனானாகூட, அவனை, நீங்க தண்டிக்க மாட்டீங்க......காலிலே விழுந்துதான் கும்பிடுவீங்க......

பெரி:- போடா! முட்டாளே!... வாடா, வெளியே வந்து, காட்டுகிறேன்னு சொன்னயே, காட்டுடா...

வா:- காட்டவேணுமா......... அதோ, அம்மனுக்கு, இடது பக்கத்திலே,

[அவர்கள் அந்தப்பக்கம் பார்க்கிறார்கள்]

இடது பக்கத்திலே,...ஒரு சிலை...

[சிலை தெரிகிறது]

கையிலே, கோடாலியோடு......

[கோடாலி தெரிகிறது]

வா:- பார்த்திங்களா......?

அவர்:- (மெள்ள) பரசுராமரு......

வா:- எங்கே, உங்க, வீரம், தீரம், பராக்கிரமம், எல்லாவற்றையும் காட்டுங்க பார்ப்போம். தாயார் தலையை வெட்டினவர்தான், பரசுராமரு.

[அவர்கள் ஏதும்கூற முடியாமல் திகைக்கிறார்கள்]

என்னங்க! கொக்கரிப்பு, கூச்சல்—மிரட்டல்—எதையும் காணோம்—வெட்டி வெட்டி, கண்டதுண்டமாக்கி, காக்கைக்கும் கழுகுக்கும் இரையாக்குவோம்னு கூவின சூரப்புலிகளெல்லாம் எங்கே?

[அவர்களில் ஒருவன் கீழே விழுந்து கும்பிட்டு]

ஒருவன்:- சாமி! உன்னைக் குறித்துதான் இவன் பேசறான் என்கிற விஷயம் தெரியாமே, உன்னை என்னென்னமோ, செய்வதாகத் தாறுமாறாப் பேசிவிட்டேன் — மன்னிச்சிடுங்க—நான் புள்ளெ குட்டிக்காரன்—என்னைச் சபித்து விடாதிங்க......

வா:- தீர்ப்பு மாறிப்போச்சு, பார்த்தயா......

[வெளியே வந்து]

இதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன், எந்த விஷயத்தையும், நாம்ப, எந்த மாதிரி கண்கொண்டு பார்க்கறமோ, அதுக்குத் தகுந்த மாதிரியாத்தான் தெரியும்னு. மனுஷன், செய்தா, மகா பாபம்னு சொல்லி விடுவோம்—இது ரிஷி செய்த காரியம்!! இதுக்கு பூஜை செய்யறோம்......

பெரி:- சரி! சரி! போ! எதை எதையோ பேசி......

வா:- இல்லாததையா பேசினேன்—

பெரி:- சாமிக்கும் மனுஷனுக்கும் வித்யாசம் இல்லையா—

வா:- இல்லேன்னு யார் சொன்னது. இருக்கவே தான், மனுஷனுன்னு எண்ணிக் கொண்டு, வெட்டிப் போட்டு விடுவோம்னுகூவினீங்க. சாமி கதை இது என்று தெரிந்ததும் விழுந்து கும்பிட்டுக் கொண்டீங்க. வித்யாசம் இல்லாமலா இருக்கு. ஆனா, சாமிக்கும் மனுஷனுக்கும் மட்டுமில்லே — மனுஷனுக்கு மனுஷன் கூட வித்யாசம் இருக்கு. தெருவிலே ரிக்ஷா இழுத்துக் கொண்டு போறவனை, போடா, குடிகார ராஸ்கல்! என்று கண்டிக்கத் தோணுது—தைரியம் பொறக்குது. ஆனா யாராவது, சீமான் வீட்டு மைனர் வெறிக்கக் குடிச்சி விட்டு ரோடு அளந்தாக் கூட கண்டிக்கத்தைரியம் வருதா! பெரிய இடத்துப் புள்ளெ. நிலை தடுமாறி இருக்குது. எங்கேயாவது விழுந்து அடிபடப் போவுது, வீடுவரைக்கும், கூடப் போயி, விட்டு விட்டு வரலாம் என்று கூடச் சொல்ல மனசு வருது..... இல்லையா......

பெரி:- அடே, போடா தம்பி, பொல்லாத அதிசயத்தைக் கண்டு விட்டே. உலகத்தோட போக்கு, அது.

வா:- உலகத்தோட போக்குன்னு சொல்லாதிங்க பெரியவரே! உலகம், ரொம்ப ரொம்ப முன்னேறி விட்டுது. உங்களோட போக்குன்னு சொல்லுங்க.........சாமி கும்பிடுகிறிங்களேல்லோ, சாமி. என்னென்ன குணாதிசயம் பார்த்திங்களேல்லோ...தாயின் தலையை வெட்டினவரு, ஒரு ரிஷி! அவருக்குக் கோயிலிலே இடம்! பூஜை!! இது என்னய்யா அக்ரமம். மனஷ ஜாதிக்கு நல்லபுத்தி கொடுத்து, நல்வழியிலே நடக்கச் சொல்றதுக்கு, சாமி, ரிஷி, அடியாரு வேணும்னு சொல்றிங்க — ரிஷியோட கதை என்னான்னு கேட்டா, இப்படிக் காட்டறிங்க, தாயாரின் தலையை வெட்டின தர்மாத்மா இவருன்னு.........சரியான்னு கேட்டு விட்டாலோ, கோபம் பொத்துக்கிட்டு வருது—கொண்ணு போடுவேனுன்னு கொக்கரிக்கிறிங்க............

பெரி:- அட, வாங்கபோவோம், பய, இப்படித்தான், நம்ம வாயைக் கிளறி வம்பு பேசுவான், வாங்க வாங்க...ஆனா, பயலுக்கு சூக்ஷமமான புத்தி, யுக்தி......

இன்னொரு பெரி:- நிறுத்தி நிதானமா யோசனை செய்து பார்த்தா, பய சொல்றது, நியாயம்னுதான் படுது......குறும்புக்காரன்!

[எல்லோரும் போகிறார்கள். வாலிபன், ஊரளவுக்கு ஊர்ப் பெரியவர்களைச் சிந்திக்கத் தூண்ட முடிந்ததை எண்ணி மகிழ்ச்சியுடன் செல்கிறான்.]

★

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95 Tirukkachinambi St, Kancheepuram.